மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2025 பிப்ரவரி 16-28 தொகுதி 23 இதழ் 13 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# டெல்லி ரயில் நிலைய துயரத்திற்குப் பொறுப்பேற்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்னவே பதவி விலகு!






# பாட்டாளி வர்க்க போராளி தோழர் திருநாவுக்கரசு நினைவு நீடூழி வாழ்க!

இககமாலெ மாநிலக் கமிட்டி உறுப்பினர், ஏஅய்சிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் திருநாவுக்கரசு கடந்த 29-01-2025 மறைந்தார். 16-02-2025 அன்று, தோழரது படத்திறப்பு நினவேந்தல் கூட்டம் நடைபெற்றது. கட்சியின் மாநிலக் கமிட்டி உறுப்பினர் தோழர் உ. அதியமான் தலைமை ஏற்று நடத்திய நிகழ்வில் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டு நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

தனது நாவுக்கு செய்யும் சிகிச்சை, மக்களோடு தோழர்களோடு பேசுவதை தடுத்துவிடக் கூடாது என்று திருநாவுக்கரசு சொன்னதை நினைவு கூர்ந்தார் ஏஅய்சிசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ. இரணியப்பன்.

தோழர் திருநாவுக்கரசின் இரண்டாவது மகள் வதனா, தனது நினைவுகளை உணர்ச்சிமயமாக பகிர்ந்து கொண்டார். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து மோதல்களின் வழியாக திருநாவுக்கரசு வினுடைய பெண் சமத்துவ கருத்துகளைப் புரிந்து கொண்டதாகக் கூறிய அவர், தனது தந்தையின் நினைவுக்குறிப்புகளை நூலாக வெளியிட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

சிம்சன் ஆலையிலிருந்து வெளியேறி "கிராமத்துக்குச் செல்லுங்கள்" என்ற சாருமஜூம்தார் அழைப்பை ஏற்று முழுநேர புரட்சியாளர்களாக மாறிய டிகேஎஸ் ஜனார்த்தனன், சுகுந்தன் (கீர்த்தி வல்லபன்) ஆகியோரின் தொடர்ச்சியாக தோழர் திருநாவுக்கரசு இறுதி மூச்சுவரை கட்சிக்காக, மக்களுக்காக பணியாற்றியவர் என இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி புகழுரை சூட்டினார்.

தோழர் திருநாவுக்கரசு உருவப் படத்தை திறந்து வைத்து உரையாற்றிய இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டபோது கட்சியுடன் மேலும் நெருக்கமாக நின்று பணியாற்றியவர், திருவள்ளூர் மாவட்டத்தில் கட்சியை நிலைநாட்டியதில் முதன்மைப் பங்கு வகித்தவர் திருநாவுக்கரசு என்பதை நினைவுகூர்ந்தார். இம்மாத இறுதியில் தில்லியில் நடைபெற உள்ள ஏஅய்சிசிடியுவின் அகில இந்திய மாநாடு, உரிய வகையில் தோழர் திருநாவுக்கரசை நினைவுகூரும் என்றார். தோழர் வதனா அவர்களின் வேண்டுகோளை ஏற்று திருநாவுக்கரசு நினைவுக் குறிப்பை கட்சி நூலாக வெளியிடும் எனவும் உறுதிபட அறிவித்தார்.

நக்சல்பாரி எழுச்சியோடு இணைந்து கொண்ட சென்னை தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்றுச் சிறப்பைச் சுட்டிக் காட்டிப் பேசிய மூத்த ஊடகவியலாளர் டி.எஸ்.எஸ்.மணி, அந்த மரபின் தொடர்ச்சியாக இருந்த தோழர் திருநாவுக்கரசின் பங்கை புகழ்ந்துரைத்தார்.

கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர் சோ.பாலசுப்பிரமணியன் தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார். கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம், மாநிலக் கமிட்டி உறுப்பினர் வரதராஜன், மாதவரம் கிளைச் செயலாளர் ரவி, சென்னைப் பெருநகர கட்சித் தோழர்கள் திருநாவுக்கரசின் குடும்ப உறுப்பினர்கள், ஜம்போபேக் தொழிலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

*2025 பிப்ரவரி 16 - 28*

*தொகுதி 23 இதழ் 13*



முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**

**பாலசுந்தரம்**

**அ. சந்திரமோகன்**

**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**



1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


**தலையங்கம்**

# ஆனந்தவிகடன் இணையதளம் முடக்கம்: மோடி ஆட்சியின் பாசிச சர்வாதிகாரம்

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறிய இந்தியர்களை நாடுகடத்துவதாகச் சொல்லி அவர்களின் கைகளில் கால்களில் விலங்கு போட்டு அனுப்பி வைக்கிறது ட்ரம்ப் அரசு. கடந்த பிப்.5ம் தேதி 104 இந்தியர்கள் கைதிகள் போல் விலங்கிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இவ்வாறு இந்திய மக்களை அவமானப்படுத்தியதை மோடி அரசு கண்டிக்கவும் இல்லை, கண்டு கொள்ளவும் இல்லை. இந்த நிலையில் மோடி அமெரிக்கா சென்று ட்ரம்பை சந்தித்துப் பேசி விட்டு வந்த பின்பும் கூட 117 இந்தியர்கள் கை,கால்களில் விலங்கு போடப்பட்டு அமெரிக்காவில் இருந்து குற்றவாளிகளைப் போல சி-17 ராணுவ விமானத்தில் அழைத்து வரப்பட்டு அமிர்தசரஸ் விமான நிலையத்தில் பிப்.14 அன்று நள்ளிரவில் இறக்கி விடப்பட்டனர். இவ்வாறு இந்தியர்களை குற்றவாளிகள் போல் விலங்கு போட்டு அவமதிப்பதை கண்டுகொள்ளாத மோடி அரசு, ட்ரம்ப் அரசுடன் போணியாகாத அமெரிக்கப் போர் விமானங்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் போட்டுள்ளது. மோடி அரசின் அமெரிக்க அடிமைத்தனத்தை விமர்சிக்கும் விதத்தில் ஆனந்த விகடன் பத்திரிகை தனது இணையதளத்தில் கேலிச்சித்திரம் வெளியிட்டிருந்தது. மோடி அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புடன் இருந்து கொண்டிருக்கும் போதே தன் நாட்டு மக்களை விலங்குகளைப் போல் ட்ரம்ப் அரசு நடத்தியதை தட்டிக் கேட்கத் திராணியற்ற நிலையில் இருந்ததை சுட்டிக்காட்டும் விதமாகவும் இந்திய மக்களின் உணர்வைப் பிரதிபலிப்பதாகவும் ஆனந்த விகடனின் கருத்துப் படம் இருந்தது. அந்தக் கருத்துப் படம் இந்தியா முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதைப் பொறுக்க முடியாத பாஜகவினர் குறிப்பாக தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை மோடி அரசுக்குப் புகார் அனுப்பினார். தற்போது ஆனந்த விகடனின் இணையதளத்தை முடக்கி வைத்துள்ளது மோடி அரசு. இது இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்தை, கருத்துரிமையை முடக்கும் செயலாகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அனுமதிக்கவே முடியாதது. ஆனந்த விகடன் கேலிச் சித்திரம் வெளிப்படுத்தியதைப் போலவே, அமெரிக்காவிற்குச் சென்றிருந்த மோடியின் நடவடிக்கையும் இருந்தது. ட்ரம்ப்பின் முன் மோடி கை கட்டி மவுனியாகவே இருந்தார். இந்தியர்களை நாடு கடத்துவதாகச் சொல்லி கை, கால்களில் விலங்கு போட்டு அனுப்புவதற்கு இந்திய அரசின் சார்பாக குறைந்தபட்ச ஆட்சேபணையைக் கூட அவர் தெரிவிக்கவில்லை. மாறாக, அமெரிக்காவின் விலைபோகாத எப் 35 ரக போர் விமானங்களை இந்தியா தலையில் கொட்டுவதற்கு ஒப்பந்தம் போட்டுள்ளார் மோடி. அமெரிக்காவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்போவது மட்டுமின்றி இந்தியா-அமெரிக்காவிற்கு இடையே வர்த்தகம் 2030க்குள் 500 பில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டும் என, தன் நாட்டு மக்களை அநாகரிகமாக, அவமரியாதையாக நடத்தும் ஒரு நாட்டுடன் ஒப்பந்தம் போட்டு பெருமை பேசுகிறார் மோடி. இந்திய இறையாளுமையை அமெரிக்காவிடம் அடமானம் வைத்துவிட்ட மோடிக்கும் பாஜகவினருக்கும் இந்தியர்களை விலங்குகள் போல் அமெரிக்கா நடத்தியது அவமானமாகத் தெரியவில்லை. மாறாக, அதைச் சுட்டிக்காட்டியதுதான் அவமானமாகத் தெரிகிறது. அமெரிக்காவின் ஆதரவு வேண்டுமென்றால், உக்ரைனின் கனிம வளத்தில் 50 சதவீதத்தை அமெரிக்காவிற்குத் தரவேண்டும் என்று ட்ரம்ப் கேட்டதற்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மறுத்துவிட்டார். ருஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் நடத்தும் போருக்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெற்று வந்த நிலையில் இப்போது தன் நாட்டு வளத்தைத் தர முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளார் ஜெலன்ஸ்கி. ஆனால், மோடியோ இந்தியாவை அமெரிக்காவிடம் அடமானம் வைத்து அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்து வருகிறார். அதைச் சுட்டிக்காட்டும் ஆனந்த விகடனை முடக்குகிறார். தமிழ்நாட்டு அரசு உட்பட அனைத்தையும் முடக்க எண்ணும் மோடி- அமித்ஷா கூட்டம் பத்திரிகை சுதந்திரத்தை, ஜனநாயகத்தை ஒட்டுமொத்தமாக முடக்க நினைக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். ❑

# கும்பமேளா துயரமும்
# மோடி - ஷா - யோகி ஆட்சியின் குற்றமும்

–திபங்கர்




இப்போது பிரயாக்ராஜ் என்ற பெயரிலுள்ள அலகாபாத்தின் கங்கை, யமுனை நதிகள் கூடுமிடத்திலும் அதே போன்ற மற்ற இடங்களான ஹரித்துவார் உஜ்ஜைனியிலும் குறிப்பிட்ட சில காலத்திற்கு ஒருமுறை சாமியார்களும், இந்து மதத்தின் மீது நம்பிக்கையுள்ள சாதாரண மக்களும், இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளிலுள்ள ஆன்மீக அன்பர்களும் ஒன்றுகூடுவது, புனிதப் பயணம் சென்று வருவது என்பது பழங்காலந்தொட்டே இருந்து வரும் பழக்கமாகும். ஆரம்பகால குறிப்புகள்படி கும்பமேளா ஒரு தத்துவார்த்த நிகழ்வாகும். ஆன்மீகச் சொற்பொழிவாலும் விவாதங்களாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டிருந்தது. காலப்போக்கில் அது ஒரு ஆற்றங்கரைத் திருவிழாவாக உருமாற்றம் அடைந்தது. இப்போது மோடி-ஷா-யோகி ஆட்சியில், ஒரு மத அரசியல் தோற்றமாக, சாதாரண இந்துக்களின் மத நம்பிக்கையைப் பயன்படுத்தி கார்ப்பரேட் இந்துத்துவாவின் அதிகாரத்தை முன்னிறுத்தவும், இந்து ராஜ்ஜியம் எனும் மத வெறி பாசிசத்தின் நிகழ்ச்சிநிரலை ஊக்குவிப்பதற்குமான ஒரு மேடையாகவும் அது மாறியுள்ளது. அந்தப் போக்கை தற்போதைய மகா கும்பமேளா ஒரு அபாயகரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

பிப்ரவரி 5ம் தேதி டெல்லியில் தேர்தல் நடக்கவிருந்த நிலையில், சங்பரிவார் கூட்டம் ஒட்டு மொத்த பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவையும் ஒரு மிகப்பெரிய விளம்பர மேடையாகப் பயன்படுத்திக் கொண்டது. மேலும் பிப்ரவரி நிதிநிலை அறிக்கைக்கான மாதமாகும். கும்பமேளாவை மிகப் பெரிய வெற்றியாகக் காட்டி இருண்ட பொருளாதார நிலைமைகளில் இருந்து மக்களின் கவனத்தை திருப்பிட இதை விட நல்ல வாய்ப்பு மோடி அரசுக்கு கிடைக்குமா என்ன? கும்பமேளாவை அற்புதமான மிகப் பெரிய நிர்வாகச் செயல்பாடு என்று பரப்புவதற்காக மோடி-யோகி இரட்டை எஞ்சின் நிர்வாகம், பல ஆயிரம் கோடி ரூபாய்களை அரசு கருவூலத்திலிருந்து அள்ளி வீசியிருக்கிறது. இந்துக்கள் அல்லாதவர்களை, குறிப்பாக இஸ்லாமியர்களை ஒட்டுமொத்த கும்பமேளா நிகழ்ச்சியில் இருந்து விலகி இருக்க சங்கிகள் மிகக் கடுமையாக கோரிவரும் போதும், கும்பமேளா “சமூக சமத்துவத்திற்கான” ஒரு பெரிய விழாவாக விளம்பரப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், ஜனவரி 29 அன்று கூட்ட நெரிசலில் நசுங்கி ஏற்பட்ட துயரத்தைத் தொடர்ந்து (மூன்று இடங்களில் இதுபோன்ற கூட்ட நெரிசல் ஏற்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன) அவர்கள் செய்த பரப்புரை பலூனில் ஓட்டை விழுந்து, உண்மை நிலை உலகுக்கு தெரிந்துவிட்டது.

கூட்ட நெரிசலில் இறந்தவர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 இருக்கும் என்று சொல்லப்படுகிறது. காயமடைந்தவர்கள் எண்ணிக்கையை கணக்கிட முடியாது. பல கூடாரங்கள், கடைகள் தீப்பிடித்து எரிவது திரும்பத் திரும்ப நடக்கின்றன. இவையெல்லாம், இந்தப் பெரிய விழாவை நிர்வாகம் செய்தது பற்றி தனக்குத்தானே பாராட்டிக் கொண்ட அரசாங்கத்தை அம்பலப்படுத்தி விட்டது. இந்தக் கூட்ட நெரிசல் சம்பவங்கள் முழுமையான நிர்வாகத் திறனின்மைக்கு ஒரு அதிர்ச்சிதரும் சாட்சியாக இருக்கிறது. சாதாரண பக்தர்களைப் பற்றி கொஞ்சம்கூட கண்டுகொள்ளாமல், முக்கியமான நபர்களுக்கு வசதி செய்து கொடுக்கவும் முன்னுரிமைகள் வழங்குவதற்குமே

அதிக கவனம் செலுத்தப்பட்டது. கூட்ட நெரிசல் கொடுமையைக் காட்டிலும் அதிர்ச்சியளிக்கக் கூடியது என்னவென்றால், உண்மையை மூடி மறைக்கவும் ஒன்றுமே நடக்காததுபோல் காட்டவும் தனது அடிமை ஊடகங்களை வைத்துக் கொண்டு அரசாங்கம் எடுத்த முயற்சிகள்தான். ஒரு சில நேர்மையான ஊடகங்கள் தவிர அடிமை ஊடகங்கள், கூட்ட நெரிசல் கொடுமையை இதுபோன்ற விழாக்களில் ஏற்படும் ஒரு சிறிய, தவிர்க்க முடியாத விபத்துகள் என்றன. அதைவிட அதிர்ச்சியானது என்னவென்றால், கும்பமேளா கூட்ட நெரிசலில் இறந்தவர்கள் முக்தி அடையும் பாக்கியம் பெற்றவர்கள் என்று கொஞ்சம்கூட கூருணர்வேயில்லாமல் இந்து ராஜ்ஜிய சங்கி ஒருவர் கூறியதுதான்.

மோடி அரசை வழிநடத்தும் வணிக-மத-அரசியலின் முக்கூட்டை முன்னிறுத்துவதற்கான ஒரு மேடையாக இந்த பிரயாக்ராஜ் கும்பமேளா மாறியுள்ளது. யோகி ஆதித்யநாத்தும் ராம்தேவ்வும் யோகக் குளியல் செய்த படத்தையும் ஒரு டஜன் சாமியார் சூழ்ந்து கொண்டு அமித்ஷாவை அபிசேகம் செய்ய, அவர் ஆற்றில் மூழ்கிக் குளித்த படத்தையும் யோகி ஆதித்யநாத் அலுவலகமே வெளியிட்டது. கும்பமேளா விழாவை இந்தியாவின் ‘ஆன்மீக அடிக்கட்டுமானம்’ என பெரிதாக விளம்பரப்படுத்தி, ‘இஸ்கான்’ அமைப்புடன் இணைந்து கொண்டு கவுதம் அதானி, புனித நீராட வந்தவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கினார். அதேவேளை, மூட நம்பிக்கைக்கு எதிராக ஆன்மீகப் பரப்புரை செய்த ஆச்சார்யா பிரசாந்த் என்கிற ஆன்மீக சொற்பொழிவாளரை சன்னியாசிகள் சிலர் சேர்ந்து அடித்து நொறுக்கினர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, 25 பேர் கொண்ட ‘ஆன்மீக அறிஞர்கள்’ குழு ஒன்றினால் தயாரிக்கப்பட்ட ஒரு ‘அகண்ட இந்து ராஜ்ஜிய’ த்திற்கான 501 பக்கங்கள் கொண்ட ஒரு வரைவு அரசியலமைப்பு அறிக்கை கும்பமேளாவில் வெளியிடப்பட்டது. வரைவு அறிக்கை, இந்துத்துவ வேதங்களான இராமாயணம், கிருஷ்ண உபதேசங்கள் முதல் மனு தர்மம் மற்றும் சாணக்கியாவின் அர்த்த சாஸ்திரம் வரை அடிப்படையாகக் கொண்ட, இஸ்லாமியர்களுக்கு ஓட்டுரிமையை மறுக்கும் மய்யமான ஒரு அதிபர் ஆட்சி முறையை முன்வைக்கிறது.

இந்து மதத்தில் நம்பிக்கை கொண்ட பல கோடி பேர்களுக்கு கும்பமேளா நம்பிக்கையின் அடிப்படையிலான ஒரு விழா. ஆனால், சங்கிகளுக்கும் இந்து ராஜ்ஜியத்தை முன் வைக்கும் ஒட்டுமொத்த கும்பல்களுக்கும் கும்பமேளா ஒரு தெளிவான அரசியல் திட்டம். மதத்தை அரசியலுடன் இணைக்கும்போது, ஆதிக்க சக்திகளின் அரசியல் நலன்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. சாதாரண மக்களின் நம்பிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. மதத்தை அரசியலாக்கி சுரண்டுவதால் ஏற்படும் பேரழிவுமிக்க விளைவுகளை கும்பமேளா துயரம் எப்போதும் நினைவூட்ட வேண்டும்.

கும்பமேளா துயரத்திற்கு மோடி-யோகி ‘இரட்டை எந்திர’ ஆட்சி வெளிப் படையாக பொறுப்பேற்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் காயமடைந்தவர் களுக்கும் போதுமான இழப்பீடு வழங்க வேண்டும். அரசமைப்பின் பாதுகாவலராக இந்திய உச்ச நீதிமன்றம், இந்து ராஷ்ட்ர சம்விதான் நிர்மல் சமிதி என்ற அமைப்பால் துவக்கி வைக்கப்பட்டுள்ள இந்திய அரசமைப்பு எதிர்ப்பு பிரச்சாரத்தை கணக்கில் கொண்டு, சமீபத்தில் அது வெளிப்படுத்திய அரசமைப்பு எதிர்ப்பு சதித்திட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். நாடாளுமன்றத்தில் அமித் ஷா தெரிவித்த இழிவான கருத்துகள் ஏதோ வாய்தடுமாறி திடீரென சொல்லப்பட்டவை அல்ல என்பது இப்போது அனைவருக்கும் மிகத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அரசமைப்பு மற்றும் குடியரசுக்கு எதிரான சதி ஒன்று திரண்டு வருகிறது, இறையாளுமை கொண்ட இந்தியாவின் சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு எனும் அரசமைப்பு பிரகடனத்தில் பற்றுறுதி கொண்ட இந்திய மக்கள் இத் தாக்குதலை முறியடிக்க ஒன்று திரள வேண்டும்.❑


**தமிழாக்கம்: சங்கரந்தம்பி**

## விஞ்ஞானி காமகோடியனின் விவரமற்ற பேச்சு

கோமியத்தில் (பசு மூத்திரம்) பல நோய்களைக் குணமாக்கும் சக்தி உள்ளது என சென்னை ஐஐடியின் முதல்வர் காம கோடி சொன்னதில் விஞ்ஞானம் இல்லை. அது அவரது தனிப்பட்ட நம்பிக்கை. அதற்காக அவர் காட்டிய ஆதாரங்களும் போதுமானது இல்லை. ஒரு விஞ்ஞானி இப்படி பேசுவது அவருக்கோ அவர் தலைமை தாங்கும் நிறுவனத்துக்கோ அழகல்ல.

விஞ்ஞானம் எங்கோ சென்று கொண்டிருக்கும் வேளையில் இப்போது அதை பின்னால் இழுத்து செல்லும் முயற்சி தான் இது. விஞ்ஞானிகள் அனைவரும் ஒன்று பட்டு இது போன்று பிற்போக்கு தனங்களை கூர்மையாக எதிர்க்க வேண்டும்.

**– டாக்டர் அமலோற்பவநாதன்; சென்னை**



# திருப்பரங்குன்றத்தை தகர்க்கக் குறிவைக்கும் இந்துத்துவ மதவெறிப் பாசிசம்!

–சிம்சன்

பாஜக தமிழ்நாட்டில் கால் பதிக்க ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சனையை திட்டமிட்டு உருவாக்கிப் பார்க்கிறது. பெருமாள் முருகனின் மாதொரு பாகன் தொடங்கி, வைரமுத்துவின் ஆண்டாள், கருப்பர் கூட்டத்தின் கந்தசஷ்டிக் கவசம், அண்ணாமலையின் வேல் யாத்திரை வரை எதிலும் பருப்பு வேகாததால், இப்போது கந்தமலையா? சிக்கந்தர் மலையா? என கலகத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறது.

திருப்பரங்குன்றம் மலையில் ஒருபுறம் அழகன் முருகன் இருக்கிறான். மறுபுறம் சிக்கந்தர் ஷா தர்கா உள்ளது. இது தவிர காசி விசுவநாதர் ஆலயமும், கருப்பணசாமி கோவிலும் உள்ளன. சிக்கந்தர் ஷா தர்கா திடீரென இப்போது உருவானது அல்ல. 1968 ஆம் ஆண்டில் நெல்சன் என்பவர் எழுதிய மதுரை மேனுவேல் (Madurai Manuel) என்ற புத்தகத்தில், 500 அடி உயர ஸ்கந்த மலையில் முசல்மான் ஒருவரது கல்லறையும் அதையொட்டி மசூதியும் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு முன்பே எஸ். சி.ஹில் 1914 ஆம் ஆண்டு எழுதிய 'யூசுப் கான் தி ரெபல் கமாண்டண்ட்' (யூசுப் கான்: கலகத் தளபதி) என்ற நூலில் சிக்கந்தர் அந்த மலையில் வாழ்ந்து மடிந்ததாகவும் அவ்விடத்திற்கு இஸ்லாமியர்களும் இந்துக்களும் செல்வார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் யூசுப் கானால் அங்கு மசூதி கட்டப்பட்டதென பாதர் ஸ்வார்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுக் குறிப்புகள் ஒரு புறம் இருக்க, நீதிமன்றங்களும் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளன.

1926 முதல் 1931 வரை மதுரை சார்பு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து பின்னர் பிரிவி கவுன்சில் என்ற மன்னர் மன்றத்திலும் வழக்குகள் நடந்துள்ளன. 12.05.1931 ஆம் நாள் சர்.ஜார்ஜ் லவ்ண்ட்ஸ் தனது தீர்ப்பில் கோவில் மற்றும் இசுலாமியார்களின் வழிபாட்டுத்தலங்கள் பற்றி தனித்தனியே பிரித்துக் குறிப்பிட்டுள்ளனர். ஏற்கனவே இருந்த வழித்தடங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. சிக்கந்தர்ஷா தர்ஹாவில் ஆடு பலியிடும் இடம், சமையல் கூடம் இன்றும் காணப்படுகிறது.

1991 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிப்பிற்கு முன்னர், வழிபாட்டுத்தலங்கள் சிறப்புச் சட்டம் (Places of worship special provisions 1991) எனும் மிக முக்கியமான சட்டம் இயற்றப்பட்டது. இந்தியா விடுதலையடைந்தபோது 15.08.1947 அன்று ஒரு வழிபாட்டுத்தலம் என்னவாக,எப்படி இருந்ததோ அதே நிலையில் அது தொடர்ந்து இருக்க வேண்டும். மாறாக அதை இன்னொரு வழிபாட்டுத் தலமாக மாற்ற முயற்சித்தால் அவர்களுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை என அச் சட்டம் கூறுகிறது. அயோத்தியில் பாபர் மசூதியைக் குறிவைத்து, தகர்த்து பிரச்சனை செய்து ஆதாயம் அடைந்ததுபோல் தமிழ்நாட்டையும் உத்தரப்பிரதேசம் போல் ஆக்கப்பார்க்கிறது சங்கிகள் கூட்டம். அதற்கு அவர்கள் இப்போது தேர்ந்தெடுத்திருக்கும் இடம் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம் மலை மீது மாமிசம் சாப்பிட்டார்கள் இஸ்லாமியர்கள். மலையின் புனிதம் கெட்டுவிட்டது. திருப்பரங்குன்றம் மலையைக் காப்போம்! இந்து கோவில்களின் புனிதம் காப்போம்! அணி திரளுங்கள் என அழைப்பு விடுப்பது மட்டுமின்றி, சிக்கந்தர் தர்காவை மலையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்கிறார்கள் பாஜக-சங்கிகள். இதுநாள் வரை இல்லாமல் இப்போது திட்டமிட்டு, அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வரும் நிலையில், கையிலெடுக்கிறார்கள் என்றால் மதக் கலவரத்தை உண்டு பண்ணும் நோக்கம் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? தமிழ்நாடு அரசு கொண்டு வந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உத்தரவுக்கு நேரெதிராக அனைத்து சாதியினரும் இந்து அல்ல, மாமிசம் சாப்பிடுபவர்கள் முட்டாள்கள், அவர்கள் இந்து அல்ல எனச் சொல்லும் சங்கிக் கூட்டம்தான்

திருப்பரங்குன்றத்தைக் காக்க, இந்து பக்தர்கள் அனைவரும் திரளுங்கள் என அழைப்பு விடுக்கிறார்கள். இதே மதுரையில் அனைத்து சாதி மக்களும் கோவிலுக்குள் நுழைந்தபோது மீனாட்சி அம்மன் கோவிலை இவர்கள்தான் பூட்டினார்கள். அரிட்டாப்பட்டியில் உள்ள தொன்மையான குகைக் கோவில்கள், டங்ஸ்டன் சுரங்கம் வந்தால் அழிக்கப்பட்டுவிடும் அபாயம் இருப்பது தெரிந்தும் அக் கோவில்களைக் காப்பாற்ற இந்துக்களே வாருங்கள் என்று அழைப்பு விடுக்காமல், டங்ஸ்டனுக்கு ஆதரவாக நின்றவர்கள் இந்தச் சங்கிகள்தான். சங்கிகளின் நோக்கம் மதத்தை வைத்து அரசியல் செய்வதுதான். அண்ணாமலையின் வேல் யாத்திரைக்கு உயர்நீதிமன்றத்தில் அனுமதி கோரிய வழக்கில் வழக்குரைஞர் வீ.ராகவாச்சாரி இது ஆன்மீக யாத்திரை என வாதாடினார். ஆனால், குருமூர்த்தியோ தந்தி தொலைக் காட்சி நேர்காணலில் இது அரசியல் யாத்திரைதான் என்று வெளிப்படையாகச் சொன்னார்.

பாபர் மசூதி இடிப்பிற்கு மூல காரணமாய் இருந்தவர் அயோத்தியின் கீழமை நீதிமன்ற நீதிபதி. இரவோடு இரவாக மசூதிக்குள் நுழைந்து ராமர் சிலையை வைத்தற்கு ஆதரவாய் தீர்ப்பளித்தார். அதுவே மசூதி இடிப்புக்கு வாய்ப்பாகிப் போனது. அதே போன்றுதான் திருப்பரங்குன்றம் கோட்டாட்சியர் இஸ்லாமியர் வழிபாட்டு முறைகளுக்கு தடை போட்டார். மதுரை மாவட்ட ஆட்சியரோ பிரச்சினையை கோட்டாட்சியர் கையாள்வார் என ஒதுங்கி நின்று கொண்டார். திருப்பரங்குன்றம் மலையில் நடைபெற்று வந்த தொடர் தற்கொலைகளைத் தடுக்க பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள காவலர்கள், 144 தடை உத்தரவையும் மீறி கோவில் வளாகத்திற்குள் நுழைந்த இந்து முன்னணி, சங்கிக் கும்பல்களை தங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின் காரணமாகத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தார்கள். தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகளும் காவல்துறையும் காவி மயமாகியிருப்பது தெரிகிறது. வேங்கை வயல் கிராமத்திற்குள் இறப்புக்குக் கூட யாரும் செல்ல முடியாதபடி காவல்துறை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்போது திருப்பரங்குன்றத்தில் மட்டும் ஏன் அவ்வாறு தமிழ்நாடு காவல்துறை தடை ஏற்படுத்திடவில்லை. திமுக அரசும் “இந்துக்கள் வாக்கு” என்பதற்காக இவற்றை அனுமதிக்கிறதா? பழங்கா நத்தத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், மதக் கலவரத்தை உண்டு பண்ணும் விதத்தில், இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக எச்.ராஜா பேசியதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, ஒரு பொறுப்புள்ள தலைவர் இப்படிப் பேசலாமா? என்று நயந்து பேசுகிறார் அமைச்சர் சேகர் பாபு. நீதிமன்றம் சொன்னதால் பாஜகவின் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்கியதாகச் சொல்லும் திமுக அரசு, சங்கிகளின் சதித் திட்டத்திற்கு எதிராக மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்காக நடக்கவிருந்த நிகழ்ச்சியை எதற்காகத் தடுத்து நிறுத்த வேண்டும்.? இதுநாள் வரை இல்லாத ஒரு பிரச்சனையைப் புதிதாக கிளப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, அதற்காக எதிர்வினையாற்றுபவர்கள் மீது நடவடிக்கை என்பது இந்துத்துவா சக்திகளுக்குத் தானே சாதகமாகும்.

ராமனின் வில்லும் முருகனின் வேலும் அனைவரையும் காக்குமென்றால் இராணுவத்திற்கும், காவலர்களுக்கும் நவீன ரக ஆயுதங்களும் தளவாடங்களும் எதற்கு? இப்படிக் கேள்வி எழுப்பாமல் தன்னலம் சார்ந்த வழிபாட்டு நம்பிக்கைகளில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கும் எளிய மக்களின் நம்பிக்கையை அரசியல் மூலதனமாக்கப் பார்க்கிறார்கள் இந்துத்துவ சங்கிகளும் அவர்களுக்கு வால்பிடிக்கும் சீமான்களும். வெறுப்பு அரசியலை சங்கிகள் தமிழ்நாட்டில் விதைத்திடும்போது தமிழ்நாடு ஆட்சியாளர்கள் பகுத்தறிவு பெரியாரை மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும். மாறாக, சங்கிகளுக்குப் போட்டியாக முத்தமிழ் முருகன் மாநாடும், அம்மன் மாநாடும் நடத்திக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு.

திருப்பரங்குன்றம் மலையைக் காக்க சென்னையில் பிப்.18ல் வேல் யாத்திரை நடத்த காவல்துறை அனுமதி மறுத்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்தது இந்துத்துவ அமைப்பு. “இந்துக்களின் ஒற்றுமை மற்றும் உரிமையை நிலை நாட்டும் வகையில் திருப்பரங்குன்றம் மலையைக் காக்க சென்னையில் அமைதியான முறையில் வேல் யாத்திரை நடத்த அனுமதியளிக்க உத்தரவிட வேண்டும்” என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலை வைத்துக்கொண்டு அமைதிப் பேரணியாம். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் திருப்பரங்குன்றம் மலையைக் காக்க சென்னையில் வேல் யாத்திரை நடத்த முடியாது. அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமையை நாட்டின் இறையாண்மை, மத நல்லிணக்கம், சமூக ஒருமைப்பாடு, ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தும் காரணத்திற்காகப் பயன்படுத்த முடியாது. சென்னையில் வேல் யாத்திரை நடத்தினால் பொது அமைதிக்கும் மத நல்லிணக்கத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் நமது பலம். எனவே, பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் மத ரீதியிலான எந்தவொரு பேரணி, யாத்திரை, ஆர்ப்பாட்டங்களுக்கு போலீஸார் ஒரு போதும் அனுமதி அளிக்கக் கூடாது என்று

உத்தரவிட்டுள்ளார். அதே நேரம் வழிபாடு தொடர்பான உரிமைக்குத் தடையில்லை என்றும் அந்த உத்தரவில் கூறியுள்ளார்.

திருப்பரங்குன்றத்தில் வசிக்கும் மக்கள் இந்துத்துவா சக்திகளின் சதியை நன்றாகவே புரிந்து கொண்டுள்ளார்கள். மத ஒற்றுமைக்கு ஊறு விளைக்க அனுமதிக்க மாட்டோம் என்கிறார்கள். திருப்பங்குன்றம், நாகூர், வேளாங்கண்ணி இவை மத நல்லிணக்கத்தை அடையாளப்படுத்துகின்றன. தமிழக மக்களும் மதச்சார்பின்மை மரபு கொண்டவர்கள். எனவேதான் சங்கிகள் திருப்பரங்குன்றத்தை தகர்க்க திட்டமிடுகிறார்கள். அதனால்தான் சங்கிகள் வெளியில் இருந்து ஆட்களை இறக்குமதி செய்கிறார்கள். இந்துத்துவ மதவெறி சக்திகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், சங்கிகள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக அதிகமான கலவரங்களைத் திட்டமிட்டு உருவாக்குவார்கள். பெரியார் மண் பெரும் கலவர மண்ணாக மாறாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு திமுக அரசிற்கு இருக்கிறது. ❑

## எல் அண்டு டி சுப்பிரமணியனின் வருமானமும் தொழிலாளர் வாங்கும் சம்பளமும்

இந்தியா முழுவதும் 20 வகையான தொழில்களில் ஈடுபடும் நான்கு லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் பணி புரியும் லார்சன் அண்ட் டியூப்ரோ (எல் &டி) கார்ப்பரேட் நிறுவனம் அதன் தலைவர் சுப்பிரமணியனுக்கு ஆண்டுக்கு ரூ.51/- கோடி வழங்குகிறது. அவருடைய அடிப்படை சம்பளம் ஆண்டுக்கு ரூ 3.6 கோடி. இதர சலுகைகள் ஆண்டுக்கு ரூ1.67/- கோடி. எல் அண்ட் டி நிறுவனம் செய்யும் வியாபாரத்தில் ஆண்டுக்கு ரூபாய் 35.28/- கோடி அவருக்கு வருமானம் வருகிறது. அவருடைய ஓய்வு காலப் பலன்களாக மட்டுமே ஆண்டுக்கு ரூபாய் 10.5/- கோடி தனியாக வழங்கப்படுகிறது. இது அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு நடுத்தர பதவியிலிருக்கும் மேலாளர் ஊதியத்தை விட 535 மடங்கு அதிகம். அன்றாடம் ரூ. 258 தினக்கூலி பெறும் எல் அண்ட் டி புதுச்சேரி ஆலையில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர் ஊதியத்துடன் ஒப்பிடும்போது இது பல ஆயிரம் மடங்காகும்.

தொழிலாளர்கள் வாரம் ஒன்றுக்கு 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் எல் அண்ட் டி சேர்மன், புதுச்சேரி எல் அண்ட் டி ஆலையில் 25 ஆண்டு கால வரலாற்றில் நாளில் 12 மணி நேரத்திற்கு மேல் வேலை பார்த்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மிகுதி நேர பணிக்கு இரட்டிப்புச் சம்பளம் வழங்கத் தயாரில்லை. ஏஐசிசிடியு தொழிற்சங்கப் போராட்டத்தின் விளைவாக புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகையை தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிட்டிருந்தும் ஆண்டு கணக்கில் பணத்தை வழங்காமல் இழுத்தடிக்கிறது எல் அண்ட் டி நிர்வாகம். பணி நிரந்தரம், சட்டக்கூலி, போனஸ், பணிக்கொடை என எதையும் வழங்காமல் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்தத் தொழிலாளர்களை சுரண்டிக் கொண்டிருக்கிறார் எல் அண்ட் டி நிறுவனத்தின் உலகறிந்த தலைவர் எஸ்.என்.சுப்ரமணியம். சட்டப்படியான உரிமைகளை, சலுகைகளைக் கேட்டால் ஆலைகளை மூடிடுவேன் என்கிறார்.

மேலும் இவர் சமீபத்தில், வேலைக்க ஆள்கிடைக்க வில்லை என்று மிகவும் கவலைப் பட்டிருக்கிறார். ஜன்தன் வங்கிக் கணக்குகள், 100 நாள் வேலைத் திட்டம், இன்னும் பல நல நலத்திட்டங்களால் (மோடி மொழியில் ரேவ்டி பண்பாடு) கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு யாரும் வருவதில்லை என்றும் நெஞ்சு வெடிக்கிறார். மோடி-ஷா சொல்லும் இந்த செல்வம் படைக்கும் சீமான்கள் ஏன் தொழிலாளர் பற்றி கவலைப்பட வேண்டும்? ❑


மாலெ தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)

அரசியல் கருத்தியல் ஆயுதம்

மாதம் இருமுறை
ஆண்டுச் சந்தா ரூ. 200/-
தனி இதழ் ரூ.10/-

# தமிழ்நாட்டின் இரும்பின் தொன்மை : இந்தியாவின் பெருமிதம் இல்லையா ?

**சந்திரமோகன்**

சனவரி, 2025ல், தமிழ்நாடு அரசு வெளியிட்ட “தமிழ்நாடு இரும்பின் தொன்மை” ஆய்வறிக்கை தமிழ்நாட்டு இரும்பின் காலத்தை 5300 ஆண்டுகளுக்கு முன்கொண்டு சென்றது; உலகிற்கு எஃகு இரும்பை முதலில் தமிழர் தான் அறிமுகப்படுத்தினார்கள் என்ற உண்மையையும் நிறுவியது.

தமிழகத்தில் அண்மைக் காலங்களில் ஆதிச்சநல்லூர், சிவகளை, மயிலாடும்பாறை , கீழ்நமண்டி, மாங்காடு மற்றும் தெலுங்கனூர் ஆகிய தொல்லியல் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில், இரும்பாலான பொருட்கள் கிடைக்கும் இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட 20 மாதிரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட அறிவியல் அடிப்படையிலான காலக்கணக்கீடுகள், தொன்மையான தொழில்நுட்பம் தொடர்பான முந்தைய கருதுகோள்களை மாற்றி அமைத்துள்ளன. தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் தொடக்கம் என்பது கி.மு. நாலாயிரத்தின் முற்பகுதியைச் சார்ந்தது என்பதை, அதாவது இரும்பின் தொன்மை 5300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் துணைகொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகள், இருவேறு அறிவியல் அணுகுமுறைகளின் அடிப்படையில், பீட்டா அனலிட்டிக்ஸ் ஆய்வகம், அரிசோனா பல்கலைக்கழக ஆய்வகம், இன்டர் யுனிவர்சிட்டி ஆக்சிலரேட்டர் மையம் (IUAC, புதுதில்லி), பீர்பால் சஹானி பேலியோ சயின்சஸ் நிறுவனம் (BSIP, லக்னோ) மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (PRL, அகமதாபாத்) ஆகிய ஐந்து ஆய்வகங்களில் சோதனையிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன ; ஆய்வு முடிவுகள் சற்றேறக்குறைய ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. தூத்துக்குடி மாவட்ட சிவகளையில் கண்டறியப்பட்ட இரும்புக் கருவிகளின் காலம் தான் மிகவும் தொன்மையானதாக, புளோரிடாவில் உள்ள பீட்டா அனலிட்டிக்ஸ் சர்வதேச ஆய்வகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகாறும், வட இந்தியாவில் கண்டறியப்பட்ட இரும்பின் பயன்பாடு கி.மு. இரண்டாயிரம் ஆண்டாக இருந்த நிலையில், தமிழ்நாட்டில் அது கி.மு. மூவாயிரம் ஆண்டாகக் கண்டறிந்திருப்பது, இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

அனைத்திற்கும் மேலாக, சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் தெலுங்கனூரில் கிடைத்த இரும்பு




வாளை உலோகவியல் ஆய்வுக்குட்படுத்திப் பெறப்பட்ட முடிவுகள், தென் இந்தியாவில் உயர்-கார்பன் எஃகு தொழில்நுட்பத்தின் தோற்றத்தின் மீது புதிய ஒளியினைப் பாய்ச்சியுள்ளது.

இதுகாறும், இரும்புத் தொழில்நுட்பம் ஆசியா மைனரில் ( ஹிட்டைட் அரசில்) தான், கி.மு. 1300 ஆண்டுவாக்கில் தோன்றியதாகவும் பின்னர் தொழில்நுட்ப பரவலின் ஒரு பகுதியாக உலகின் பிற பகுதிகளுக்குச் சென்றடைந்ததாகவும் கருதப்படுகிறது. அதாவது, ஹிட்டைட் அரசில் காணப்பட்ட எஃகு தான், உலகிலேயே காலத்தில் முந்தையதாக கருதப்பட்டு வந்தது. புதிய ஆய்வு முடிவுகள் தமிழ்நாட்டில் முதன்முதலாக கண்டறியப்பட்ட எஃகு தொழில்நுட்பத்தில் தயாரான கருவிகள் தான், இந்தியாவுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் பரவியது என்பதை அறிவித்தன.

### பாஜக ஆட்சி ஏற்க மறுக்கிறது !

3,500 ஆண்டுகால வேத கால ஆரிய நாகரிகத்தைதான் பாஜக அரசும், சங்கப் பரிவாரங்களும் இந்தியாவின் நாகரிகமாக போற்றிப்பாடி வருகின்றன. வரலாற்றில் இல்லாத சரஸ்வதி நாகரிக கட்டுக்கதையை கட்டமைக்க ஒன்றிய பாஜக அரசு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி செலவு செய்துவருகிறது. ஆனால், “தமிழ்நாட்டில் 5,345 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே இரும்புக் காலம் நிலவியது” என்று அறிவியலின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் பற்றி இதுவரை எவ்விதமான கருத்துகளையும் தெரிவிக்கவில்லை.

இந்த ஆய்வு முடிவுகள், இந்தியாவில் இரும்பின் தோற்றம் மீதான மிகத்தொன்மையான

கண்டுபிடிப்பாக திகழ்வது மட்டுமல்லாமல், எஃகு இரும்பு தயாரிப்பில், உலகிலேயே இந்தியா / தமிழ்நாடு தான் முதன்மையாக திகழ்ந்தது என்ற சர்வதேச பெருமையையும் சேர்ப்பதுமாகும். எனினும், ஒன்றிய பாஜக அரசாங்கம், அதன் கலாச்சார அமைச்சரகம், அதன் கீழ் இயங்கும் இந்திய தொல்லியல் துறை - ஆர்க்கியாலஜிகல் சர்வே ஆப் இந்தியா, எந்தவொரு கருத்தும் தெரிவிக்காமல் அலட்சியம் செய்கிறது. ஏன்?

**2022ல் மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் வெளியான போதும் புறக்கணிக்கப்பட்டோம்!**

'தமிழக நிலப்பரப்பில், 4200 ஆண்டுகளுக்கு முன்னர் இரும்புக் கருவிகளின் பயன்பாடு நிலவியது' என்பதை உறுதிப்படுத்திய, பேராசிரியர் கா.ராஜன் தலைமையிலான தொல்லியல் ஆய்வுக் குழுவினர் தயாரித்த மயிலாடும்பாறை அகழாய்வு முடிவுகளை மே 2022ல், தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்; "இந்திய துணை கண்டத்தின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்படும்" என்றும் பெருமிதத்துடன் அறிவித்தார்.

அதாவது, 4200 ஆண்டுகளுக்கு முன்னர், கிமு 2200ல், இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சிந்துவெளி நாகரிகம் செழித்தோங்கிய காலகட்டத்தில், தமிழ்நாட்டில் இரும்பை வெட்டி எடுத்து, உருக்கி, இரும்பு கருவிகள் தயாரித்து வெளிநாட்டு வணிகத்திற்கும், உள்நாட்டு பயன்பாட்டுக்கும் பயன்படுத்திய நிலையில் தமிழர் நாகரிகம் வளர்ந்திருந்தது என்பது உறுதியானது.

எஃகு இரும்பு தயாரிப்பில் கி.மு. 1400க்கு முன்னரே சிறந்திருந்த தமிழ் வணிக அரசுகள், வெளிநாடுகளில் அமைத்த வணிக செட்டில்மெண்ட்கள் மூலமாக ஹிட்டைட் அரசுக்கு இரும்பு தொழில்நுட்பம் சென்றது என்ற கருதுகோள் உறுதியானது. தமிழகத்திலிருந்து சென்ற உருக்கு இரும்பு மூலமாக, கிமு 600 ல் சிரியாவின் டமாஸ்கஸ் வாள் தயாரிக்கப்பட்டது என்பதும், ஏற்கெனவே அங்கே கிடைத்த தொல்லியல் சான்றுகள் உதவியுடன் பல ஆய்வாளர்களாலும் ஏற்கப்பட்டுள்ளது.

எனினும், 2022ல் வெளியான மயிலாடும்பாறை அறிக்கையையும், தமிழ்நாட்டின் இரும்பின் காலத்தை 5300 ஆண்டுகளுக்கு முந்தையதாக நிறுவியுள்ள சிவகளை, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட தற்போதைய 2025ம் ஆண்டு புதிய ஆய்வுகளையும் பாஜக அரசு ஏற்கவில்லை.

**இந்திய தொல்லியல் துறை ஆர்எஸ்எஸ் சார்பு அமைப்பாக திகழ்கிறது!**

இந்திய தொல்லியல் துறை - ஏஎஸ்ஐ ஆர்எஸ்எஸ் பிடியில் உள்ளது. இந்தியாவில் நடைபெறும் தொல்லியல் முடிவுகளில் ஆரிய சார்பு, ஆர்எஸ்எஸ் சார்பு ஆய்வாளர்கள் தொடர்ந்து தலையீடு செய்கின்றனர். அவர்களது முடிவுப்படி, இந்தியாவில் இரும்பு பயன்பாடு காலம் கிமு 1300- 1400தான். அதிலும் தமிழ்நாட்டில் இரும்பு பயன்பாட்டு காலம் கி.மு. 600 மட்டுமே ஆகும். அதாவது, வட இந்தியாவில்தான் இரும்பு முதலில் தோன்றியதாகவும் தமிழ்நாடு மிகத் தாமதமாக தான் இரும்பு நாகரிகத்துக்கு வந்ததாகவும் அதுவரை வேட்டையாடும் சமூகமாகவே தமிழர் நாகரிகம் இருந்ததாகவும் அவர்கள் விளக்கி வந்தனர். தமிழ்நாடு நிலப்பரப்பில், காலத்தில் தொன்மையான இரும்பு தொல்லியல் பொருட்கள் கண்டறியப்பட்ட ஒவ்வொரு முறையும், 'ஓரிடத்தில் மட்டும் கிடைத்தால் போதாது, பல்வேறு இடங்களிலும் இதேமாதிரியான காலகட்ட முடிவுகள் கிடைக்க வேண்டும்' எனவும் ஆய்வுகளை புறந்தள்ளி வந்தனர்.

இப்படியாகத் தான், இரும்பு கனிமவளம் செறிந்த சேலம் மாவட்ட தெலுங்கானூரில் கண்டறியப்பட்ட உருக்கு/ ஊட்ஸ் எஃகிலான வாள் ஒன்றின் முனையில் எடுத்த துகளின் கரிம காலக் கணக்கீடு மற்றும் ஹைதராபாத் பகுதியில் அகழாய்வு ஒன்றில் கிடைத்த இரும்பு துகளின் ஆய்வு முடிவுகள் கிமு 2000 யை கடந்தபோதும், இந்திய தொல்லியல் துறை அவற்றை நிராகரித்தது.

**தமிழர் நாகரிகத்தின் தொன்மை தொடர்ச்சியாக ஏன் மறுக்கப்படுகிறது ?**

ஆர்எஸ்எஸ் அமைப்பின் சித்தாந்தம் 'ஒற்றை தேசம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை மொழி, ஒற்றை வரலாறு' என்பதாகும்; இது பிற அனைத்து இனங்களின் வரலாறு, பண்பாடு -பாரம்பரியங்களை நிராகரிக்கிறது. தமிழர் தொன்மையை ஏற்பது, ஆரியப் பெருமிதத்திற்கு எதிராக திராவிடத்தை ஏற்பதாகவும், வேதகால நாகரிகம், சரஸ்வதி நாகரிகம் என்ற பெருமைக்கு எதிராக தமிழர் நாகரிகத்தின் தொன்மையை அங்கிகரிப்பதாகும். இது ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தின் தற்கொலைக்கு ஒப்பானதாகும். எனவேதான், பாஜக - ஆர்எஸ்எஸ் தமிழ்மொழி, பண்பாடு/கலாச்சாரம், வரலாற்றுக்கு உரிய அங்கீகாரம் தருவதில்லை.

**இந்தியா பற்றிய ஆர்எஸ்எஸ் சித்திரமும்; குருஜி கோல்வால்கர் சிந்தனைகளும்**

ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கம் - ஆர்எஸ்எஸ், 1925 ஆம் ஆண்டு டாக்டர் கேசவ் பலிராம் ஹெட்கேவரால் நிறுவப்பட்டது என்றாலும், அவரது வாரிசான மாதவ் சதாசிவ் கோல்வால்கரின் சித்தாந்தத்தை தான் அடிப்படையாக கொண்டுள்ளது. 1940 ஆம் ஆண்டு ஹெட்கேவரின் மரணத்திற்குப் பிறகு, குருஜி கோல்வால்கர் ஆர்.எஸ்.எஸ் ஸின் சர்சங்சாலக் - தலைவராகப் பொறுப்பேற்றார்; 1973ல் இறக்கும் வரை அந்தப் பதவியில் இருந்தார். எம்எஸ். கோல்வால்கரின் எழுத்துக்கள் மற்றும் உரைகள் கொண்ட

“சிந்தனைகளின் தொகுப்பு”, இன்றுவரை சங்கத்தின் கீதா உபதேசமாக உள்ளது.

ஆர்க்டிக், அண்டார்டிக் எனப் படும் வட, தென் துருவங்கள் 130 மில்லியன் ஆண்டுகளாக இருந்த இடத்திலேயே இருக்க, “ஆரியர்கள் ஆர்க்டிக் பிரதேசத்தி லிருந்து வரவில்லை. பீஹாருக்கு அருகில் இருந்த ஆர்க்டிக்தான் வடக்கு நோக்கி நகர்ந்துவிட்டது. அதில் வாழ்ந்த ஆரியர்கள் பீஹாருக்கு அருகிலேயே இருந்து விட்டனர். ஆரியர்கள் புலம் பெயர்ந்தவர்கள் அல்ல, இந்தியாவின் பூர்வகுடிகள் தான்” என எம்எஸ் கோல்வால்கர் எழுதியிருக்கிறார். இப்படியாக அறிவியலற்ற, வரலாற்று புரட்டுகள் கொண்ட ஆரிய பெருமிதத்தைகட்டமைப்பதையே, சங்கப் பரிவாரம் தொடர்ந்து செய்துவருகிறது.

### கலாச்சார துறை ஆர்எஸ்எஸ் பள்ளியில் பயின்றவர்கள் பிடியில் உள்ளது!

கடந்த 2023 செப்டம்பரில் தமுஎகச அமைப்பு மாநாட்டில், சனாதனம் பற்றி உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்து மீது, “சனாதனத்துக்கு எதிராக யார் பேசினாலும் நாக்கை பிடுங்குவோம். கண்களையும் தோண்டுவோம்” எனப் பேசியவர் தான், இந்தியாவின் தற்போதைய கலாச்சார துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் ஆவார். இவரது நேரடிப் பொறுப்பில்தான் இந்திய தொல்லியல் துறை உள்ளது. அதன் கூடுதல் தலைமை இயக்குநராக 2021 ம் ஆண்டில் பணியமர்த்தப்பட்டு, தற்போது வரை பணியாற்றி வரும் அலோக் திரிபாதியும் கடைந்தெடுத்த சங்கி ஆவார்.

எனவேதான், தமிழ்நாட்டின் இரும்பின் தொன்மையை பாஜக ஆட்சி ஏற்க மறுக்கிறது.

தமிழர் நாகரிகத்தின் தொன்மையை உறுதியாக நிறுவிட, ஆரிய - ஆர்எஸ்எஸ் சித்தாந்தம் மீதான கருத்துப் போராட்டங்களை தீவிரப்படுத்திட வேண்டும்.❑

# தில்லியில் பாஜகவின் தேர்தல் வெற்றியும் பீகாருக்கான சவால்களும்

2015, 2020இல் நடைபெற்ற அடுத்தடுத்த தேர்தல்களில் மிகப்பெரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பிறகு, தற்போது 2025 இல் ஆம் ஆத்மி கட்சி பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. 53 லிருந்து 43 ஆக, அதுபெற்ற வாக்கின் பங்குகளில் கிட்டத்தட்ட பத்து விழுக்காடு இழந்துள்ளது. இதன்மூலம் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 22 ஆக குறைந்துவிட்டது. பாஜக பெற்ற வாக்கின் பங்கு 38 லிருந்து 45 ஆக, ஏழு விழுக்காடு அதிகரித்துள்ளது. அது வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 8 லிருந்து 48 ஆக, ஆறு மடங்கு அதிகரித்துள்ளது. 27 ஆண்டு நீண்ட இடைவெளிக்கு பிறகு நாட்டின் தலைநகரில் பாஜக அதிகாரத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளதை இது குறிக்கிறது. 2024 மக்களவைத் தேர்தல்களில் தனிப் பெரும்பான்மையை பாஜக இழந்துவிட்ட பிறகு என்டிஏ விற்கு கிடைத்துள்ள மூன்றாவது சட்டமன்ற தேர்தல் வெற்றியாகும்.

தில்லியில் நிகழ்ந்துள்ள இந்த பாரதூரமான மாற்றத்திற்கு பல்வேறு காரணிகள் பங்களித்துள்ளன. 2020 தேர்தல்களில் தில்லியில் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற விரக்தியில் பாஜக இருந்தது. அந்தத் தேர்தலில் குடிமக்கள் இயக்கத்தை நசுக்க மதவெறி வன்முறையை வெளிப்படையாக தூண்டிவிட்ட தீய பரப்புரை இயக்கத்தை அது நடத்திய போது இது தெள்ளத் தெளிவானது. உடனடியான தேர்தல் ஆதாயங்களை அவை வழங்காத போது, மோடி அரசாங்கம் மாற்றுக் கருத்துகளை மவுனமாக்க கொடிய அடக்குமுறை இயக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டது. மாணவர் செயல்பாட்டாளர்கள், மனித உரிமை இயக்கத்தவர்கள், எதிர்க்கட்சி கவுன்சிலர்களும் கூட தொடர்ந்து அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவால், துணை முதலமைச்சர் மணிஸ் சிசோடியா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களின் தொடர் கைதுகள் மூலம், ஆம் ஆத்மி கட்சிக்கு எதிராக அரசியல் ரீதியாக தண்டிக்கும் இயக்கப் போக்கு வந்தது.

அரசியல் ரீதியாக பழி வாங்குவதைத் தாண்டி, ஒன்றிய அரசாங்கம், துணைநிலை ஆளுநர் அலுவலகம் என்ற கருவிகளை பயன்படுத்தி, ஆம் ஆத்மி கட்சியின் அரசாங்கத்தை திட்டமிட்ட வகையில் சுற்றி வளைத்துத் தனிமைப்படுத்துவதை பாஜக மேற்கொண்டது. தில்லிக்கு முழு மாநில அந்தஸ்து கோரியதை பாஜகவும் கூட வழக்கமாகக் கொண்டிருந்த நேரம் ஒன்று இருந்தது. ஆனால் ஆம் ஆத்மி அரசாங்கத்திற்கு தடங்கல் ஏற்படுத்த, பாஜக உச்ச நீதிமன்றத்தை மீறி, சந்தேகத்திற்கிடமான தில்லி சேவைகள் சட்டத்தை (தேசிய தலைநகர் பிரதேச அரசாங்கத் திருத்தச் சட்டம், 2023) நிறைவேற்றியதன் மூலம், தில்லி அரசாங்கத்தின் அதிகாரங்களை கடுமையாகக் குறைத்து, கிட்டத்தட்ட அதனை ஒரு நகராட்சியின் தரத்திற்கு தாழ்த்தியது. தில்லி அரசாங்கத்தைத் தடுக்கும் விதத்திலான சுற்றி வளைத்தல், அதன் அதிகாரங்களை சிதைத்தல் ஆகியவற்றுடன் தில்லியின் வாக்காளர் பட்டியலில் கச்சிதமான முறைகேடுகளும் சேர்க்கப்பட்டு, வாக்காளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நீக்கங்கள், சேர்ப்புகள், இடமாற்றங்கள் என முழுமை பெற்றது.

ஜார்க்கண்ட்டில் பாஜக இதே போன்றதொரு தந்திரத்தை முயற்சி செய்தது. முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டார். இடைக்கால முதலமைச்சர் பாஜகவிற்கு தாவினார். தேர்தல் பரப்புரை என்ற பெயரில் முஸ்லிம்களுக்கு எதிராக பழங்குடியினரை நிறுத்துவதற்கான நச்சுத்தன்மை மிகுந்த வெறுப்புப் பரப்புரை இயக்கம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இருப்பினும் அந்தத் திட்டம் வீழ்ச்சியுற்றது. அடுத்தடுத்த இரண்டாவது சட்டமன்றத் தேர்தலிலும் பாஜக தோல்வியுற்றது. ஜார்கண்டில் தோல்வியுற்ற பாஜகவின் திட்டம் தில்லியில் வெற்றிபெற்றது ஏன்? இந்த இரண்டு மாநிலங்களிலும் எதிர் கட்சிகள் தேர்தல்களில் போராடிய வழியில் இதற்கான பதிலின் ஒரு பகுதி உள்ளது. ஒன்றுபட்ட பாஜக எதிர்ப்பு முகாமை ஜார்க்கண்ட் கொண்டிருந்தது. அரசமைப்பு சட்டம், கூட்டாட்சி உரிமைகள், மாநிலத்தின் விருப்பங்களை பாதுகாப்பதை நோக்கிய உயிர்த் துடிப்பான பரப்புரை இயக்கத்தை கொண்டிருந்தது. தில்லியில் இந்தியா முகாமிற்குள் ஒற்றுமை இல்லை. பாஜகவின் பாசிசத் தாக்குதலை முறியடிக்க வேண்டும் என்ற வலிமையான அரசியல் நோக்குநிலை, தேர்தல் விவாதத்தில் கண்ணுக்கு புலப்படும் வகையில் காணாமல் போய்விட்டது.

பரந்த மக்களிடையே ஆம் ஆத்மி கட்சிக்கான வரவேற்பும், அரவிந்த் கெஜ்ரிவாலின் ‘சாமான்ய மனிதன்’ என்ற பிம்பம் சரிந்து விட்டது வெளிப்படையாக தெரிந்தது. 200 யூனிட்டுகள் இலவச மின்சாரமும், மேம்பட்ட பொதுக் கல்வி மீதான அதிகரிக்கப்பட்ட முக்கியத்துவமும் தில்லியின் ஏழை, கீழ் நடுத்தர வர்க்க மக்களிடையே இன்னமும் கூட சாதகமான எதிரொலிப்பை கொண்டிருந்தன. ஆனால் தில்லியின் தொழிலாளர் வர்க்கக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டது, நகராட்சி சேவைகள் வழங்குவதில் மோசமான செயல்பாடுகள், தில்லியில் ஜனநாயகத்தின் மீதான அடக்குமுறை, வெறுப்பை ஊக்குவித்தல் பற்றிய பிரச்சினைகளில் கிட்டத்தட்ட முழுமையான மவுனம் ஆகியவை ஆம் ஆத்மி கட்சிக்கு முந்தைய இரண்டு தேர்தல்களில் பிரமிக்கத்தக்க பெரும்பான்மையை வழங்கிய, துடிப்பான மக்கள் ஆதரவை பலவீனமடையச் செய்து விட்டது. மது மோசடி, ₹33.6 கோடிக்கு புதுப்பிக்கப்பட்ட முதலமைச்சரின் பங்களா குறித்த குற்றச்சாட்டுகள், கறைபடியாத, எளிமையான ஆம் ஆத்மி கட்சியின் தலைவர்கள் குறித்த பிம்பத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் சிதைத்து விட்டது. ஆக மக்கள் மத்தியில் அவரது மங்கிப்போன பிம்பத்தின் பின்னணியில் வெற்றியை கொண்டு வரும் நிலையில் கேஜ்ரிவால் இல்லை.

தில்லியின் மீது பாஜகவின் புதுப்பிக்கப்பட்ட முழுமையான கட்டுப்பாடு, பொது மக்களுக்கும் முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் ஒட்டுமொத்த பிரிவினருக்கும், நாட்டின் தலைநகரின் செயல்பாடுகளுக்கும் பெரும் சவாலை முன்னிறுத்தும். இந்த மாறிவிட்ட அரசியல் கள நிலவரம் நாடாளுமன்ற அவைக்குள் ஒருங்கிணைப்பு என்ற வரம்புக்குட்பட்ட கட்டமைப்பை தாண்டி, தில்லியிலுள்ள பாஜக அல்லாத பரந்த அரசியல் முகாம் மத்தியில் கூட்டுறவின் உணர்வை வளர்க்கும் என நம்பிக்கை கொள்ளலாம். அகில இந்திய பார்வை என்ற அடிப்படையில் அனைவரின் கண்களும் 2025இல் தேர்தல் நடைபெறப் போகும் ஒரேயொரு மாநிலமான பீகாரை நோக்கியே இருக்கும். தில்லியில் கடந்த 27 ஆண்டுகளுக்கு பாஜக அதிகாரத்திற்கு வெளியே இருந்தது. ஆம் ஆத்மி கட்சியின் மீது பரந்த மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திலிருந்து அது பலன்பெற்றது. பீகாரில் பாஜக, ஜேடியு உடனான கூட்டணியில் அநேகமாக கடந்த 20 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அங்கே பாஜக-ஜேடியு ஆட்சியின் அனைத்து மட்டத்திலான தோல்வி, துரோகத்திற்கு எதிரான கோபம் பரந்த மக்களிடையே வளர்ந்து வருகிறது.

ஜார்கண்டில் ஒரு ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகள் பாஜகவை தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றன, என்றால், பீகாரிலும் அதே போன்று ஏன் நிகழாது என்பதற்கான ஒரு காரணமும் இல்லை. இந்தியா கூட்டணிக்குள் தேர்தல் போராட்டங்களுக்கு இடையில் நெருக்கமான பிணைப்பு, களத்தில் பல்வகைப்பட்ட போராட்டங்கள், கூடுதல் அறிவார்ந்த தேர்தல் உடன்பாடு ஆகியவற்றைக் கொண்டு, பாஜகவின் மகாராஷ்டிரா-ஹரியானா-தில்லியின் தொடர் வெற்றிகளை பீகார் தடுத்து நிறுத்த முடியும். மேலும் சங்கிப் படையணியின் பாசிசத் தாக்குதலுக்கு தீர்மானகரமானதொரு அடியை வழங்க முடியும். மோடி அரசாங்கம் அமெரிக்காவிடம் சரணடைவதன் மூலமாக, இந்தியாவினுடைய காலனிய எதிர்ப்பு விடுதலை இயக்கத்தின் மரபை இழிவுபடுத்துகிறது; விடுதலை இயக்கத்திலிருந்து உருவாகி வந்த அரசமைப்புச் சட்டத்தின் மதச்சார்பற்ற, ஜனநாயக குணம்சத்தை பலவீனப்படுத்துகிறது. இந்த நேரத்தில் காலனிய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்களில் வரலாற்று ரீதியான ஒரு முக்கிய அரணாக விளங்கிய பீகார், உண்மையான ஜனநாயகம், சமூக மாற்றத்திற்கான நீண்ட நெடிய போராட்டத்தின் கொத்தளமாக விளங்கும் என நிச்சயமாக மீண்டும் ஒருமுறை நிரூபிக்கும்.❑

**தமிழாக்கம்- செந்தில்**

திராவிட மாடல் ஆட்சியில்...

# மலைக்க வைக்கும் தொழில் வளர்ச்சி; மலை ஏறும் வேலை வாய்ப்பு!?

**பாலசுந்தரம்**

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் எதிர்பார்த்தபடியே திமுக வெற்றி பெற்றிருக்கிறது. அதிமுக தொடங்கி புதிதாக தோன்றியுள்ள தவெக வரை போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டதால் திமுகவின் வெற்றி எளிதாகிவிட்டது. நாம் தமிழர் கட்சி, வைப்புத் தொகையைகூட இழந்து எதிர்பார்த்தபடியே படுதோல்வி அடைந்துவிட்டது. திமுகவும் நாதக மட்டுமே நேருக்கு நேர் மோதிக்கொண்ட இந்தத் தேர்தலில், அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகளின் வாக்கு நாதகவுக்கு சென்று திமுகவுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தலாம் என்றுகூட சிலர் எதிர்பார்த்தனர். ஆனால் லண்டனில் அரசியல் படித்து திரும்பிய அண்ணாமலைக்குதான் அதிர்ச்சி! ராமரைப்போல், சீமான் பின்னால் ஒளிந்து கொண்டு பெரியாரை இழிவுபடுத்திய அண்ணாமலைக்கும் சேர்த்து, முகத்தில் கரி பூசிவிட்டனர் வாக்காளர்கள். ‘பெரியாரை ஏற்கும் தம்பிகள் என்னைவிட்டு விலகிவிடலாம்’ என்று விரக்திபொங்க பேசியிருக்கிறார் சீமான்! சீமான் சரிவை சீமானே தேடிக்கொண்டார்.

### மக்கள் நம்பிக்கையும் திமுகவும்?

“மக்கள் என் மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றி வருகிறேன்” என்பதற்கான சான்று தான் இடைத்தேர்தல் தீர்ப்பு என ஸ்டாலின் கூறியிருக்கிறார். தமிழ்நாட்டு வாக்காளர்கள், 2021 தேர்தலில் திமுக மீது வைத்த நம்பிக்கையை முதலமைச்சர் காப்பாற்றியுள்ளாரா? இனியாவது காப்பாற்றுவாரா?

இந்தக் கேள்விக்கு, பதில் சொல்வது போல, 2021 தேர்தலில் திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 389 வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக சிவகங்கையில் முதலமைச்சர் கூறியிருக்கிறார்! ஏற்கனவே, 100% வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக முதல்வரே கூறியிருந்தார். ஆனால், இப்போது 77% (389) வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என்று கூறியுள்ளார்! எதனால் இந்த சதவிகித குழப்பம்?

“அண்ணா வழியில் அயராது உழைப்போம்! முத்தமிழ் அறிஞர் கலைஞர் கட்டமைத்த நவீன தமிழகத்தை மேம்படுத்துவோம்!” என்ற சூளுரையுடன் 2021 தேர்தல் அறிக்கை முடிகிறது. ’நவீன தமிழகம்’ என்பதன் பொருள், ‘அதிமுக ஆட்சியில் பின்னடைந்திருந்த பொருளாதாரத்தை’ மீட்டெடுப்பது, அதை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக ’மேம்படுத்துவது’ என்று சொல்லப்படுகிறது. தற்போதைய ரூபாய் மதிப்பில் இது ரூ. 86 லட்சம் கோடி; ரூபாய் மதிப்பு குறைய குறைய இது இன்னும் எகிறும்.

பொருளாதார வளர்ச்சி என்றால் தொழில் வளர்ச்சி, உள்கட்டமைப்பு வளர்ச்சி; இந்த வளர்ச்சிக்கு அந்நிய முதலீட்டு வளர்ச்சி தேவைப்படுவதாக சொல்லப்படுகிறது. தொழில் வளர்ச்சி ஏற்பட்டால் வேலைவாய்ப்பு ஏற்படும். வேலை வாய்ப்பு, சமூக வளர்ச்சியை ஏற்படுத்தும்; ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் என்றும் அடுக்கப்படுகிறது.

“தமிழ்நாட்டை வஞ்சிக்கும்” மோடி அரசை எதிர்த்து ஆவடி பொதுக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர், தமிழ்நாட்டின் வளர்ச்சியை பட்டியலிட்டுள்ளார்.

தனது பேச்சுக்கு துணையாக, சென்னைக்கு வந்த ஒன்றிய அமைச்சர் ஜோதிர் ஆதித்யா சிந்தியாவை அழைத்திருக்கிறார் ஸ்டாலின். “சென்னையிலுள்ள தகவல்தொழில்நுட்ப (அய்டி) நிறுவனங்கள் 2 லட்சத்து 50 ஆயிரம் கோடிக்கு வருவாய் ஈட்டுகின்றன; திருப்பெரும்புதூர், நாட்டின் மோட்டார் வாகன உற்பத்தியில் 30% பங்கை உற்பத்தி செய்கிறது. உலகின் புதிய டெட்ராய்டு நகரமாக சென்னை உருவெடுத்திருக்கிறது. ஆண்டுக்கு 50 ஆயிரம் திறன்மிக்க பொறியாளர்களை உருவாக்குகிறது. சாலைகளும் மெட்ரோ ரயிலும் சிறப்பாக இருக்கின்றன. இந்தியாவுக்கே சென்னைதான் வழிகாட்டும் முன்மாதிரி (ரோல் மாடல்)” என ஒன்றிய பாஜக அமைச்சர் பேசியிருப்பதை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை, தனது ஆட்சியின் சாதனையாக வானுயர புகழ்ந்து பேசியிருக்கிறார். தொழில் வளர்ச்சிதான் அனைத்து வளர்ச்சிக்கும் ஆதாரம் என்று முதலமைச்சர் கூறுவது சொல்லாமலே விளங்கும்.

தொழில் வளர்ச்சியும் வேலை வாய்ப்பும்?

காமராஜர் காலத்தில் தொடங்கப்பட்ட தொழில் வளர்ச்சி, கருணாநிதி காலத்தில் தொடர்ந்தது. தனியார்மய, தாராளமய, உலகமய வழியாக 'மூன்றாவது வளர்ந்த மாநிலமாக' உள்ளது

இந்த தொழில் வளர்ச்சி, தமிழ்நாட்டில் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்தி விட்டதா? ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அறிக்கை, பொருளாதார ஆய்வறிக்கை, தனியார் அமைப்புகள் வெளியிடும் புள்ளி விவர அறிக்கைகளை சுட்டிக்காட்டி தமிழ்நாடுதான் முன்னிலை வகிக்கிறது என முதலமைச்சரும் துணைமுதலமைச்சரும் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். உண்மைதானா?

பொருளாதார வளர்ச்சிக்கு பல பரிமாண அடையாளங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவற்றுள், வேலைவாய்ப்பு அடிப்படையானது, முதன்மையானது. அதனால்தான், ஆட்சியாளர்கள் தொழில் வளர்ச்சி, அந்நிய முதலீடு பற்றி பேசும் போதெல்லாம் வேலைவாய்ப்பையும் சேர்த்தே பேசுகின்றனர்.

**மலையிலேறும் வேலை வாய்ப்பு!**

திமுக தேர்தல் அறிக்கையில், வாக்குறுதி எண்கள் 152 தொடங்கி, 27 வாக்குறுதிகள் வேலை வாய்ப்பு பற்றி பேசுகின்றன. இந்த வாக்குறுதிகள் 55 லட்சம் வேலைவாய்ப்புகளுக்கு உறுதி அளித்தன. கூடுதலாக மூன்று வாக்குறுதிகள் சுயவேலை வாய்ப்பு குறித்து பேசுகின்றன.

ஆண்டுக்கு 10 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அறிக்கை சொன்னது. நான்கு ஆண்டுகளில் 40 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். இதுவரை 268 தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 12 லட்சம்பேர்கலந்துகொண்டு 2 லட்சத்து 24 ஆயிரம் பேர் வேலை பெற்றுள்ளதாக தொழிலாளர் நலத்துறை, வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் சி வி. கணேசன் கூறுகிறார். வேலைதேடும் 6 பேரில் ஒருவர் மட்டுமே வேலை பெறுகிறார். இவர்களது ஊதியம் மாதம் ரூ 18000 முதல் 25,000 வரைதான். ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல, ரூ 10 லட்சம் கோடி முதலீடு 30 லட்சம் வேலையை மட்டுமே உருவாக்கியிருக்கிறது. ஒவ்வொரு கோடிக்கும் 3 வேலை மட்டுமே உருவாகிறது. நெல்லை ஆய்வுப் பயணத்தின் போது, ரூ 3800 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட ஆலைமூலம் 2,800 பேருக்கு வேலை கிடைக்கும் என்று முதலமைச்சர் அறிவித்தார். ஒரு கோடி ரூபாய்க்கு 0.7 பேருக்கு வேலை! இதிலிருந்து வேலைவாய்ப்பு பற்றிய உண்மை சித்திரத்தை தெரிந்து கொள்ளலாம்.

தொழில் வளர்ச்சியில் முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாடு வேலையில்லா திண்டாட்டத்திலும் முன்னணியில் உள்ளது (4.6%). குறை வேலைவாய்ப்பு விகிதம் (நிரந்தரமற்ற, குறைந்த ஊதிய வேலைவாய்ப்பு) 8% ஆக உள்ளது. இந்தியாவிலேயே, மிக அதிகமாக 43% பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள் என ஸ்டாலின் பெருமை பொங்க கூறிவருகிறார். தமிழ்நாட்டின் சமூகநீதிக் கொள்கைகளால் உருவான மிக மலிவான பெண் உழைப்பும் ஒப்பந்த, தற்காலிக (கீழான வேலைவாய்ப்பு) தொழிலாளர் உழைப்பும் மலையென லாபத்தைக் குவிக்கிறது. உழைப்பாளி சமூகத்துக்கு கடலென வறுமையைத் தருகிறது. அதனால்தான் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்கள் சென்னையை நோக்கி படையெடுக்கின்றன. மூலதனம் விரும்பும் கொள்ளை லாபத்தை உறுதி செய்யவே, திமுக ஆட்சி 12 மணி வேலை நேரத்தைக் கொண்டு வந்தது. உழைப்புச் சக்தியின் எதிர்ப்பால் திரும்பப் பெற்றுக் கொண்டது.

ஆவடி பொதுக்கூட்டத்தில் மோடி ஆட்சியை மிகக் கடுமையாகவும் சரியாகவும் சாடியுள்ளார் முதலமைச்சர். மோடி ஆட்சியை பார்த்து "நீங்கள் வஞ்சிப்பவர்கள்" என்று சரியாகவே கூறியிருக்கிறார். ஆனால் "நாங்கள் வாழவைப்பவர்கள்" என்றும் சொல்லியிருக்கிறார். தேர்தலின்போது திமுக தனது வாக்குறுதிகளை பிரபலப்படுத்தியது. இப்போது, தொழிலாளர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கிராமப்புர தொழிலாளர், அந்த வாக்குறுதிகளை பிரபலப்படுத்தி வருகின்றனர்.

வெறித்தனமாக முயற்சி செய்யும் பாஜகவை விரட்டி அடிக்க 2026 தேர்தலுக்கு வலுவான கூட்டணி அவசியம்தான். எந்தக் கூட்டணியும் மக்களால்தான் வெற்றி பெறுகின்றன. ஈரோடு கிழக்கு தேர்தல் சொல்லும் செய்தி முத்துவேல்கருணாநிதிஸ்டாலினுக்கு தெரியாதா என்ன?

உயர்நிலை பொருளாதார வளர்ச்சியை உயர்நிலை சமூக வளர்ச்சியாக இணைப்பதுதான் "திராவிட மாடல்" என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டின், தொழில் வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் இந்த "மாடல்" மீது கேள்வி எழுப்புகிறது.❑

## கேள்விக்கென்ன பதில்?

ட்ரம்பும் நானும் ஒன்று! அதிபர் ட்ரம்ப்பிடம் நான் மிகவும் பாராட்டுகிற விஷயம், அவர் அமெரிக்காவின் தேசிய நலனை உச்சமாக வைத்திருக்கிறார். நானும் அப்படித்தான். இந்தியாவின் தேசிய நலனை எல்லாவற்றிலும் முதன்மையாக வைத்திருக்கிறேன்.

**- அமெரிக்காவில் இந்திய பிரதமர் மோடி**

ஆமாம், ட்ரம்பின் தேசம் எலன் மஸ்க் போல மோடியின் தேசம் அதானியோ?

**- இந்திய குடிமகள்**

விடுதலைப் போராட்ட வீரர் வீரசவர்க்கரை தவறுதலாக பிரிட்டிஷ் படையிடம் ஒப்படைத்து விட்டனர் பிரஞ்சு தேசத்தவர் சிலர். அதனால் அவர் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டார்.

**-பிரான்சில் நரேந்திர மோடி**

-வீரசவர்க்கரின் வீரம் பற்றி இந்திய மண்ணில் பேசியிருந்தால், அவர் அந்தமான் சிறையிலிருந்து பிரிட்டிஷாருக்கு எழுதிய மன்னிப்புக் கடிதங்களை காட்டியிருப்பார்களோ?

**-இந்திய தேசபக்தன்**

“மாநில சட்டப்பேரவைகளில் அந்தந்த மாநில அரசுகள் வழங்கும் உரையை ஆளுநர்கள் வாசிப்பதுதான் மரபு”. என்று சொல்லி மாநில அரசுக்கு கட்டுப்பட்டு ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்ற உண்மையை பிரதமர் மோடியே ஒப்புக் கொண்ட பிறகு, என்ன சொல்லப் போகிறார் ஆளுநர் ரவி?

**-ஆவடி பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் கேள்வி**

மரபை மீறிய ஆளுநரை பிரதமர் திருப்பி அழைத்துக் கொள்ளச் சொல்லி ஏன் முதலமைச்சர் வலியுறுத்தக் கூடாது?

**-பொது சனம்**

மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்! திமுகவுக்கு செல்வாக்கு பெருகியிருப்பதாக கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன. நாங்கள் கருத்துக் கணிப்பை நம்புவதில்லை. ஆனால், ஸ்டாலின் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். **-சட்ட அமைச்சர் ரகுபதி**

அதனால்தான் போக்குவரத்து தொழிலாளர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், வேங்கை வயல் தலித்துகள் தங்கள் மகிழ்ச்சியை தெருக்களில் இறங்கி கொண்டாடி வருகிறார்களோ?

**-சாமான்யன்**

## சின்னியம்பாளையம் தியாகிகளுக்கு வீரவணக்கம்!

1946, ஜனவரி 8 அன்று பிரிட்டிஷ் அரசால் தோழர்கள் ரங்கையயன், ரங்கண்ணன், வெங்கடாச்சலம், சின்னையன் நால்வரும் தூக்கிலிடப்பட்டு 79 ஆண்டுகளாகிறது. ஏகாதிபத்திய பிரிட்டிஷ் ஆட்சி எந்தளவுக்கு தொழிலாளர் இயக்கம் மீதும் தொழிலாளர் போராளிகள் மீதும் வெறுப்பு கொண்டு, பொய்வழக்கு புனைந்து தூக்கிலிட்டது என்பதற்கு சாட்சியாக உள்ளனர் சின்னியம்பாளையம் தியாகிகள்.

இன்று கார்ப்பரேட், காவிப்பாசிச ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சியைப் போலவே தொழிலாளர் இயக்கங்கள் மீதும் தொழிலாளர் போராளிகள் மீதும் வெறுப்பு கொண்டிருக்கிறது என்பதற்கு 4 தொழிலாளர் சட்டத்தொகுப்பே சாட்சி.

மோடி ஆட்சியால் ஊக்கம் பெற்ற முதலாளிகள், 78 ஆண்டுகளுக்கு முன்பு நாளொன்றுக்கு 14,15 மணிநேரம் தொழிலாளர் சுரண்டப்பட்டதை மீண்டும் கொண்டு வருவதை திட்டமாக கொண்டு வாரத்திற்கு 90 மணி நேர வேலை என்று பேசி வருகின்றனர்.

சின்னியம்பாளையம் தியாகிகள் நினைவு நாள் அன்று, நினைவிடத்தை தமிழ்நாடு அரசு ஒரு தொழிலாளர் நினைவிடமாக உருவாக்கிட வேண்டும் என்ற ஏஐசிசிடியு கோரிக்கையை மீண்டும் எழுப்பிய

இகக (மாலெ) மாநிலக்குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன், பெரோஸ்பாபு, கட்டுமான சங்க மாநிலப் பொருளாளர் நாராயணன், மாவட்டக் கமிட்டி உறுப்பினர் மோகன்குமார் மற்றும் சிவா, நவாஸ் ஆகியோர் தியாகிகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். கொடூரமான முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்துப் போராடியதற்காக கோவை பிரிக்கால் தோழர்கள் ராமமூர்த்தி, மணிவண்ணன் ஆயுள் தண்டனை கைதிகளாக கோவை சிறையில் உள்ளதையும் நினைவு கூர்ந்தனர்.

கடும் ஒடுக்குமுறைக்கும் பாலியல் அடக்குமுறைக்கும் ஆளான பெண் தொழிலாளி ராஜியை பலவந்தப்படுத்திய ரவுடிகளை தாக்கியதற்காகவே அன்று தொழிலாளர் முன்னணிகள்மீது கொடிய கொலைவழக்கை சுமத்தியது.

பெண் தொழிலாளர் உரிமை, கவுரவத்துக்காக போராடிய தொழிலாளர் வர்க்க முன்னோடி ராஜியும் நினைவுகூரப்பட்டார்.❑

# தொழிலாளர் வர்க்கத்தின் மீதான மோடியின் தாக்குதலுக்கு எதிராக நாட்டின் ஆலைச் சக்கரங்களை நிறுத்தத் தயாராவோம்! ஏஐசிசிடியுவின் 2025 ஆம் ஆண்டுக்கான அறைகூவல்!

தொழிலாளர் வர்க்கத்தின் மீதான மோடி அரசாங்கத்தின் அனைத்தும் தழுவிய தாக்குதலுக்கான ஆண்டாக 2025 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமலாக்கம், பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்களை கண்மூடித்தனமாக தனியார் மயமாக்குவது, தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமல்படுத்துவதற்கு எதிரான தொழிலாளர்களின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு மூன்று குற்றவியல் சட்டங்களை பயன்படுத்துவது ஆகியவை தான் மோடி வகுத்துள்ள திட்டங்களாகும்.

தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராகவும் விவசாயிகள் விரோத, கார்ப்பரேட் ஆதரவு விவசாய சட்டங்களை பின் கதவு வழியாக கொண்டு வருவதற்கு எதிராகவுமான தொழிலாளர்கள் விவசாயிகளின் ஒன்றுபட்ட இயக்கத்தை குறிக்கின்ற ஆண்டாகவும் 2025 இருக்கப் போகிறது. விவசாய சந்தைக் கொள்கை என்பது மிகச் சமீபத்தில் இந்த அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பிற்போக்கான நடவடிக்கையாகும். இந்த அரசாங்கத்துக்கு எதிராக ஏற்கனவே ஜனவரி 26 அன்று விவசாயிகள் டிராக்டர்களுடனும் இதர வாகனங்களுடனும் பேரணியை நடத்தி போராட்டத்தை துவக்கி இருக்கிறார்கள். தொழிலாளர்களின் விருப்பத்தை மீறி மோடி செயல்படுவாரேயானால் ஏ ஐ சி சி டி யு உட்பட அனைத்து மையத் தொழிற்சங்கங்களும் இணைந்து அகில இந்திய வேலை நிறுத்தம் நடத்த தயாராகி வருகிறார்கள். மத்தியத் தொழிலாளர் அமைச்சர் மன்சுக், மார்ச் 31 தொழிலாளர் சட்ட தொகுப்புகளுக்கான மாநில அரசுகளின் விதிகளை வெளியிடுவாரானால் தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடன் இணைந்து இந்த நாட்டின் சக்கரங்களை நிறுத்த மார்ச் 31 தயாராகும்.

ஏஐசிசிடியு உட்பட அனைத்து மையத் தொழிற்சங்கங்களையும் பட்ஜெட்டுக்கு முந்தைய கலந்தாய்வுக் கூட்டத்திற்கு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அழைத்திருந்த போதிலும், மத்திய பட்ஜெட்டில் தொழிலாளர் தரப்பில் முன்வைத்த கோரிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. ஆகவே, மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்த அறைகூவல் படி 2025 பிப்ரவரி 5 அன்று நாடு முழுவதும் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

மோடி 3.0 பாஜக அரசாங்கம் தொழிலாளர்களின் உரிமைகள் மீதான தாக்குதலை புதுப்பித்துள்ளது. தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கான விதிகளை எல்லா மாநில அரசாங்கங்களும் சட்டப்படி உருவாக்குவதற்கு முன்னமே கூட அதை அமுல்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் பற்றி பேசுகிறது. பின் கதவு வழியாக அமல்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் ஆராய்ந்து வருகிறது. பீடி துறையில் அதுபோன்ற முயற்சி ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. 2025 மார்ச் 31 சட்டத் தொகுப்புக்கான விதிகளை மாநில அரசாங்கங்கள் வெளியிட்டு விடுவார்கள் என தொழிலாளர் அமைச்சர் நம்பிக்கையுடன் இருக்கிறார். இன்போசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி முதல் எல் அண்ட் டி சுப்பிரமணியம் வரை உள்ள நாட்டின் கார்ப்பரேட்டுகள் 70 மணி நேரம் முதல் 90 மணி நேரம் வரையிலான வார வேலை குறித்து பேசி அக்கருத்துக்காக அணி திரட்டி வருகிறார்கள். கார்ப்பரேட் குழும தலைவர்களுக்கும், மேல்மட்ட நிர்வாகிகளுக்கும் வீட்டில் செய்வதற்கு என்று வேலை எதுவும் இல்லை. ஆனால்,தொழிலாளர்கள் வேலை முடித்து பல மணி நேர பயணத்திற்குப் பிறகு பல்வேறு குடும்ப பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் போதுமான தூக்கம் கூட இல்லாமல் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த கார்ப்பரேட்டுகளுக்கு அடுத்த நாள் உழைப்பதற்காக அவர்கள் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டியுமுள்ளது. சட்டவிரோதமாக தொழிலாளர்கள் 12 மணி நேரம் வேலை செய்ய நிப்பந்திக்கப்படுகிறார்கள். நீண்ட நேரம் உழைப்பதால் உற்பத்தித் திறன் உண்மையிலேயே உயராது என்பதையும் உற்பத்தித்திறன் குறையும் என்பதையும் கார்ப்பரேட்டுகள் தங்கள் லாபத்திற்கான பேராசை காரணமாக மறைக்கிறார்கள். குறைந்த அளவு நேர வேலையும் நல்ல சம்பளமும் கிடைக்கும் போது உற்பத்தித் திறனும் இன்னும் சொல்லப்போனால் லாபமும் கூட அதிகரிக்கும் என பல்வேறு தரவுகள் உறுதி செய்கின்றன. உலகின் பல்வேறு நாடுகள் 6 மணி நேர வேலை நாளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. எவ்வித உருப்படியான நலத்திட்டங்களும் இல்லாத இ-ஷ்ரம் இணையதளத்தில் 30 கோடி தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தின் ஆண்டு இறுதி அறிக்கை தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய சில நலத்திட்டங்களை இ - ஷ்ரம் போர்ட்டலில் இணைத்திருக்கிறார்களே ஒழிய மற்றபடி

புதிய திட்டம் எதுவும் இல்லை. தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் சில மருந்தகங்களும் மருத்துவமனைகளும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அந்தத் திட்டம் இதுவரை நீட்டிக்கப்படவில்லை. அப்படியே தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்றாலும் அந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் காப்பீட்டுக்கான பங்களிப்பு தொகை செலுத்தும் விதமாகவே அது உருவாக்கப்படுகிறது. தொழிலாளர்கள் தங்கள் பையில் இருந்து கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும். வேலை அளிப்பவர்/முதன்மை வேலை அளிப்பவர் என்ற அடையாளம் முழுவதுமாக நீர்த்துப் போக செய்யப்படுகிறது அல்லது மறுக்கப்படுகிறது. வேலை, ஊதியத்துக்கான பாதுகாப்பு பறித்தெடுக்கப்படுகிறது. ஆனால், அரசாங்கம் ஜிக் மற்றும் பிளாட்பார்ம் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு பற்றி மட்டுமே பேசி வருகிறது. பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் நிறைவேற்றியுள்ள சட்டங்களிலும் கூட சில சொற்ப சமூக பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் தாண்டி வேறு எதுவும் இல்லை என்ற நிலையே இருக்கிறது. வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் கூட்டப்படும் இந்தியத் தொழிலாளர் மாநாடு, மோடி மத்தியில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்பு கடந்த 10 ஆண்டுகளில் கூட்டப்படவில்லை. அது பழங்கதையாய் போய்விட்டது. மோடியின் பாஜக - தேஜகூ காலத்திற்கு முன்பு முதலாளிகள், தொழிற்சங்கங்கள், ஒன்றிய அரசாங்கம் ஆகியோர் அடங்கிய இந்திய தொழிலாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட எந்த முடிவுகள் குறித்தும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தாமல் இருந்து வருகிறது.

சுகாதாரம், கல்வி இன்ன பிற துறைகள் சம்பந்தப்பட்ட ஒன்றிய அரசின் திட்டங்களை மக்களின் வீட்டு வாசலுக்கு எடுத்துச் செல்பவர்களாக ஒரு கோடிக்கும் அதிகமான திட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மதிய உணவுத் திட்ட தொழிலாளர்கள், ஆஷா தொழிலாளர்கள், அங்கன்வாடி தொழிலாளர்கள் இன்னும் இதுபோல நூற்றுக்கணக்கான வேறு வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். ஆனால், இவர்களையெல்லாம் தொழிலாளர்கள் என்று அங்கீகரிக்கவே இந்த அரசாங்கம் தயாராக இல்லாத போது, தொழிலாளர்களுக்கான உரிமைகள், குறைந்தபட்ச சம்பளம் என்பதைப் பற்றி எப்படி பேச முடியும்? இது அரசாங்கமே நடத்துகிற ஈவிரக்கமற்ற கொடிய சுரண்டலாகும். மோடி முதலைக் கண்ணீர் வடிப்பாரே ஒழிய இவர்களுடைய ஊதியத்தை, பணிநிலையை மேம்படுத்துவது பற்றி ஒரு சொல் கூட பேச மாட்டார். தூய்மை இந்தியா திட்டத்தின் பகுதியாக அதில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு எதுவும் செய்யாத மோடி, சில தேர்ந்தெடுத்த தொழிலாளர்களின் கால்களைக் கழுவி சுத்தம் செய்து நாடகமாடிக்கொண்டார்.

3.89 கோடி காலிப் பணியிடங்கள் தேசிய வேலைவாய்ப்புச் சேவை இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக மோடி சொல்கிறார். இரயில்வே துறையில் மட்டும் 20 லட்சம் வேலை வாய்ப்புகள் பறிபோயுள்ளன. எல்லா துறைகளிலும் நாட்டின் இளைஞர்களுக்கான கண்ணியமான வேலை வாய்ப்பை மறுத்துவிட்டு, அக்னிவீர் திட்டத்தைப் போல 'குறித்த கால வேலை' என்ற முன்மாதிரியை ஊக்குவித்து வருகிறபோது, எந்த ஒரு அரசாங்க காலிப் பணியிடமும் நிரப்பப்படுவதில்லை. பீகார் மாநில தேர்வாணைய ஊழலை அடுத்து போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன. காலிப் பணியிடங்களை நிரப்பப்படுவதில்லை என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும் போது, தேசிய வேலைவாய்ப்புத் திட்ட இணையத்தில் ( National Career Scheme Portal) காலிப் பணியிட எண்ணிக்கையை சேர்த்துக் கொண்டு போவதால் பயன் ஏதும் இல்லை. நமது நாட்டில் ஓராண்டுக்கு குறைந்தபட்சம் 2 கோடி வேலை வாய்ப்புகள் தேவைப்படுகிறது. ஆனால் மோடி அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி வேலை வாய்ப்புகளை இழந்து வருகிறது. மோடி அரசாங்கத்தால் எல்லோருக்கும் வேலை அளிக்க முடியவில்லை. அதுபோல் இளைஞர்களுக்கு வேலை இல்லா கால நிவாரணத்தையும் வழங்க முடியவில்லை. பதிலாக, அது கார்ப்பரேட்டுகளுக்கு வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை (employment linked incentive)என்பதை வழங்கி வருகிறது. ஆனால், கார்ப்பரேட்டுகளோ பெரிய அளவிலான வரிச் சலுகை மூலம் கிடைக்கும் பயன்களை பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை. மாறாக, சம்பள வெட்டு, ஊதிய தேக்கம், கடுமையான ஊதியக் குறைப்பு, உழைப்பு பெண்மயமாவதை அகற்றுதல், ஊரக வேலைத் திட்ட நிதி ஒதுக்கீட்டை குறைப்பதன் மூலம் கிராமப்புர மக்களை வேலை தேடி நகரங்களுக்குள் தள்ளுவது இன்ன பிற ஆகியவையே இன்றைய நிலவரமாக உள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவது, வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர்களுக்கு குறைந்தபட்சம் பஞ்சப்படியுடன் ரூபாய் 10,000 ஓய்வூதியம், குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 35,000 அறிவித்தல், தரைமட்டக் கூலி, குறித்த கால வேலை போன்ற கருத்தாக்கங்களை நீக்குவது, 85% கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர் சட்ட அமலாக்கத்திற்கு விலக்கு

அளிக்கும் வகையில் லேஆப், கதவடைப்பு போன்றவற்றுக்கு அனுமதி பெறுவதற்கான தொழிலாளர் எண்ணிக்கையை 300 ஆக உயர்த்தும் முடிவைக் கைவிடுதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு இ எஸ் ஐ, பி எஃப் திட்ட அமலாக்கம் ஆகியவை இன்றைய தொழிலாளி வர்க்கத்தின் முதன்மை கோரிக்கைகளாக எழுந்து வருகின்றன.

தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை அமல்படுத்தும் பிரச்சனை மீது மோடி மற்றும் பாஜக அரசாங்கத்துடன் மோதுவதற்கு தொழிலாளி வர்க்கம் தீர்மானகரமாக உள்ளது.

தொழிலாளர் வர்க்க இயக்கம் மேலெழுந்து வரும் காலகட்டமாக இப்போதைய காலகட்டம் உள்ளது. ஈவிரக்கமற்ற தொழிலாளர் விரோத கார்ப்பரேட் ஆதரவு திட்டங்களை கொண்டுள்ள மோடி அரசாங்கத்துக்கு எதிராகவும், அதுபோல் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளை கொண்டுள்ள பிற அரசாங்கங்களுக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்து வருவதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் சென்னை சாம்சங் தொழிலாளர்களின் போராட்டமாகும். அங்கு பெரும்பான்மை தொழிற்சங்கத்திற்கு சங்கப் பதிவும் மறுக்கப்பட்டது. அங்கீகாரமும் மறுக்கப்பட்டது. ஜிக் பொருளாதாரமும், இணைய வழி பிளாட்பார்ம் பொருளாதாரமும் வளர்ந்து வரும் போது டிஜிட்டல் ஸ்டிரைக் என்பது புதிய போராட்ட வடிவமாக முன்னுக்கு வந்திருக்கிறது. தொழிலாளர்கள் கடும் கோபத்துடன் இருக்கிறார்கள். மூலதனம் நாட்டை விட்டு வெளியேறிவிடப் போகிறது என்றும், கார்ப்பரேட்டுகளின், பன்னாட்டு நிறுவனங்களின் நலன் கருதியும் பாஜக தலைவர்கள் ஊடகங்களில் கண்ணீர் வடிக்கிறார்கள். தொழிலாளர்களின் நிலைமை குறித்து அவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. மோடிக்காகவும் அவருடைய கார்ப்பரேட் நண்பர்களுக்காகவும் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை தியாகம் செய்ய வேண்டும் என்று அவர்கள் உபதேசம் செய்கிறார்கள். மாருதி தொழிலாளர்கள் அதிலும் குறிப்பாக அமைப்புசாரா, நிரந்தரமற்ற தொழிலாளர்கள் மாருதி நிர்வாகத்தை எதிர்கொள்ள மீண்டும் தங்களுக்குள் அமைப்பாகி வருகிறார்கள். பாக்ஸ்கான் நிறுவனத்துக்கு எதிராக மேம்பட்ட ஊதியம், மேம்பட்ட பணி நிலைமைகளுக்கான பெண் தொழிலாளர்களின் போராட்டம் இன்னும் கனன்று கொண்டிருக்கிறது. உத்திரபிரதேசத்திலும் சண்டிகரிலும் ஸ்மார்ட் மீட்டருக்கு எதிராகவும் இரத்தத்தை உறிஞ்சும் மின் கட்டண உயர்வுக்கு எதிராகவும் உத்தர பிரதேச, சண்டிகர் மாநில விவசாயிகள் தீரமிக்க போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். விவசாயிகள் தலைவர் தல்லேவால் நீதி கேட்டு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார். விவசாயத்தை வணிகமயமாக்கும் கார்ப்பரேட்மயமாக்கும் மோடி தலைமையிலான பாஜக அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு விவசாய அமைப்புகள் ஒன்றாக இணைந்து தீர்மானகரமான யுத்தத்தை தொடுக்க இருக்கின்றன. 2025 ஆம் ஆண்டு கார்ப்பரேட்டுகளுக்கு எதிரான, அதன் பாதம் தாங்கியான மோடி தலைமையிலான பாஜக அரசாங்கத்துக்கு எதிரான விவசாயிகள், தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டங்களின் ஆண்டாக நிச்சயம் அமையும்.❑

## அகில இந்திய விவசாயிகள் மகாசபை தேசிய செயற்குழு கூட்டம்

ஒடிசா மாநிலம் கோனார்க்கில், 2025 சன.28, 29 ஆகிய தேதிகளில், அகில இந்திய விவசாயிகள் மகாசபை தேசிய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொதுச்செயலாளர் ராஜாராம் சிங் எம்.பி உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் செயற்குழு உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தேசிய செயற்குழுக் கூட்டமானது, தேசிய அரசியல் சூழ்நிலை மற்றும் மோடி அரசின் புதிய சட்டங்கள், கொள்கைகள் வழியாக இந்திய விவசாயம் - விவசாயிகள், பழங்குடியினர் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள், நாடு தழுவிய விவசாயிகள் போராட்டங்களில் குறிப்பாக எஸ்கேஎம் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் செயற்பாடுகளில் நமது பங்கு ஆகியவை பற்றி விவாதித்தது.

இந்திய விவசாயிகளின் வேளாண் சந்தையை கார்ப்பரேட் கம்பெனிகள், பெரிய வியாபாரிகளுக்குத் தாரை வார்க்க வழிவகுக்கும், மோடி அரசின் புதிய சட்டமான “வேளாண்மை சந்தைப்படுத்துதலுக்கான தேசிய கொள்கை கட்டமைப்பு - NPFAM” யையும், மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்த கனிம வளங்களை கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்க கொண்டு வரப்பட்ட “சுரங்கம் - கனிமங்கள் திருத்தச் சட்டம் 2023 “ யையும் ரத்து செய்யக் கோருவது, இவற்றுக்கு எதிராக போராட்ட இயக்கங்கள் கட்டமைப்பது, அவிமச வில் 15 இலட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பது, மாவட்ட, மாநில மாநாடுகள் மற்றும் 2025ஆம் ஆண்டு இறுதியில் தேசிய மாநாடு நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள், முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

கார்ப்பரேட் சூறையாடலுக்கு எதிராக, நீர், வனம், நிலம் மீதான இந்திய விவசாயிகள் - பழங்குடியினர் உரிமைகளைப் பாதுகாக்க - வென்றெடுக்க போராட்ட இயக்கங்களைக் கட்டமைப்போம் ; அகில இந்திய விவசாயிகள் மகாசபை அமைப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவோம் !

# காரைக்கால் மீனவர்கள் தாக்கப்பட்டதற்கெதிராக...




புதுச்சேரி, தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது தொடர்கிறது. 2014ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்காக தமிழ்நாட்டிற்கு வந்தபோது, பாஜக ஆட்சி வந்துவிட்டால் தமிழ்நாட்டின் மீனவர்கள் யாரும் இலங்கை அரசால் கைது செய்யப்படமாட்டார்கள், தாக்கப்படமாட்டார்கள் என்று மோடி வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், மோடி அரியணை ஏறிய பின்னர் தமிழ்நாடு, புதுச்சேரியை சேர்ந்த 3544 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், சிறைவைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் காரைக்கால் மீனவர்கள் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார்கள். இலங்கைக் கடற்படை தாக்குதலில் இருந்து மீனவர்களை பாதுகாக்கத் தவறிய ஒன்றிய பாஜக கூட்டணி மோடி அரசைக் கண்டித்து மீன்பிடி வலை, படகுகளுடன் ஏஐசிசிடியு தொழிற்சங்கம் 5-2-2025 அன்று புதுச்சேரியில் கண்டன ஆர்பாட்டம் நடத்தியது. சி.எஸ்.சகாயராஜ் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் ஏஐசிசிடியு தேசிய துணைத் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன், புதுச்சேரி மாநிலச் செயலாளர் எஸ்.புருஷோத்தமன் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகச் செயலாளர் விஜயா இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) புதுச்சேரி நகர கமிட்டி செயலாளர் எஸ் அருள் கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தில்,

அ) பாரம்பரிய மீன்பிடித் தொழிலாளரை பாதுகாத்திட இலங்கை-இந்திய மீனவர்களின் கூட்டுப் பேச்சுவார்த்தைக்கு ஒன்றிய பாஜக அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்,

ஆ) இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும் நிபந்தனை இன்றி இலங்கை அரசு விடுதலை செய்திட ஒன்றிய பாஜக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

இ) இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட, இலங்கைக் கடற்படையால் நாசமாக்கப்பட்ட அனைத்து இந்திய மீனவர்களின் படகுகளுக்கும் இந்திய அரசே இழப்பீடு வழங்க வேண்டும். இந்திய மீனவர்களுக்கு இலங்கை அரசு விதிக்கும் அபராதத் தொகையையும் இந்திய அரசே செலுத்த வேண்டும்,

ஈ) நிச்சயமற்ற வாழ்க்கை நடத்தும் மீனவர்களையும் மீனவப் பெண்களையும் பாதுகாத்திட, புதுச்சேரி, தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்தி, இருநாட்டு உறவுகளையும் மேம்படுத்திட ஒன்றிய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

உ) மீன்பிடி தொழிலாளருக்கு, மீனவப் பெண்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வகை அரசு,தனியார் கடன்களை ஒன்றிய அரசு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்,

ஊ) பாக் (Palk)நீர் இணைப்பு, மன்னார் வளைகுடாவில் பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்திட, கடல் நீர் மாசுபடுவதைத் தடுக்க, இந்திய கடல் எல்லைகளில் மீன்வளங்களை அதிகரித்திட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எ) இலங்கை கடற்படை துப்பாக்கி சூட்டில் படுகாயம் அடைந்த காரைக்கால் மீனவர்களுக்கு ஒன்றிய அரசு இழப்பீடு வழங்குவதுடன் முழு மருத்துவ செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.❑

# ஒன்றிய அரசின் பட்ஜெட்: வறியவர்களுக்கு வரிச்சுமை; பெரும் பணக்காரர்களுக்கோ வரி இல்லை

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மோடியின் மூன்றாவது ஆட்சிக் காலத்தின் முதல் நிதிநிலை அறிக்கையை முன்வைத்திருக்கிறார். உணவுப்பொருள் பணவீக்கம் அதிகரிப்பு, வளர்ச்சி மந்தம், வேலை இழப்பு அதிகரிப்பு, ரூபாய் மதிப்பு சரிவு, நுகர்வு குறைவு, விவசாயிகள் போராட்டம், அமெரிக்காவின் புதிய டிரம்ப் நிர்வாகம் சுய-தற்காப்பு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வளர்ந்துவரும் நாடுகளின் ஏற்றுமதியைப் பாதிப்பது போன்ற உலகளாவிய நிச்சயமற்ற நிலைமைகள் என்ற சூழலில் இந்த நிதி நிலை அறிக்கை வந்துள்ளது. ஏழைகள் மூச்சுவிடும் வகையில், பேராசைப் பிடித்த பணக்காரர்களுக்கு வரிவிதிக்கும் நிதிநிலை அறிக்கையாக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பணக்காரர்களுக்கான அரசு என்று பெயர் பெற்ற இந்த அரசு தன் அடையாளத்தைச் மாற்றிக் கொள்ள வில்லை.

உண்மை என்னவென்றால், பொருளா தாரத்தின் உண்மையான நிலவரம் குறித்த எல்லா கருத்துகளையும் இந்த நிதிநிலை அறிக்கை ஏற்க மறுக்கிறது.

நடுத்தர வர்க்கத்தினருக்கு நேரடி வரியிலிருந்து ஓரளவு நிவாரணம் கிடைக்கிறது. ஆனால், தொழிலாளர், விவசாயிகள், பெரிய அளவிலான உழைக்கும் மக்களுக்கும் வலியைக் குறைக்கத் தேவைப்படுகின்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான ஜிஎஸ்டி வரி குறைப்பு குறித்த அறிவிப்பு எதுவும் இல்லை. அதேபோல, நல்வாழ்வு திட்டங்கள் மூலமாக நிவாரணம் அளிக்கும் அறிவிப்புகளும் இல்லை. இப்பிரிவு மக்கள் படும் துன்பம் நீடிக்கும். பெருநிறுவனங்கள், பணக்காரர்கள், செல்வந்தர்கள் மீது வரிகளை உயர்த்த அரசாங்கத்திற்கு அரசியல் விருப்பம் இல்லை என்பதால், நல்வாழ்வு திட்டங்கள், சமூக, விவசாய, கிராமப்புர துறைகளுக்கான செலவினங்களைக் குறைப்பதன் மூலம், கணக்கு வழக்கை சரிக்கட்ட மட்டுமே இந்த நிதிநிலை அறிக்கை முயற்சிக்கிறது.

கடந்த 2024-25 ஆண்டின் மத்திய துறைத் திட்டங்கள் மற்றும் மத்திய பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களுக்கான பட்ஜெட் மதிப்பீடு ரூ. 20,22,154 கோடியாக இருந்தது. ஆனால், உண்மையான செலவினங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 19,28,176 கோடியாக, அதாவது ரூ. 93,978 கோடி அளவுக்குக் குறைந்துள்ளது.

2024-25-இல் பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டம், தேசிய கிராமப்புர குடிநீர் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களுக்கான திருத்தப்பட்ட செலவினங்கள், கடந்த ஆண்டு ஒதுக்கீட்டை விட, அதிர்ச்சி தரும் வகையில் 50% க்கும் கீழே குறைந்துள்ளது.

மகாத்மா காந்தி கிராமப்புர வேலைஉறுதித் திட்டம், கிராமப்புர சாலைத் திட்டம், அட்டவணை சாதியினருக்கான உதவித்தொகை போன்ற திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் எதிர்பார்த்ததை விட குறைவாக உள்ளன. சுகாதாரம், பெண்கள், குழந்தை வளர்ச்சி போன்ற துறைகளில் தேவையான அளவு செலவினங்கள் அதிகரிக்கப்படவில்லை. அடுத்த ஆண்டுக்கான உணவு, பொது விநியோகத் துறைக்கான ஒதுக்கீடும் குறைவாகவே உள்ளது.

திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் அமைச்சகத்திற்கு கடந்த ஆண்டு ரூ. 1,435 கோடி ஒதுக்கீடு வழங்கப்பட்டது, ஆனால் கடந்த ஆண்டில் செய்யப்பட்ட செலவு ரூ. 669 கோடியாக மட்டுமே இருந்தது.

சுகாதாரத் துறையின் உண்மையான செலவினங்கள் கடந்த ஆண்டு முன்மொழிவு களை விட குறைவாக இருந்தன. ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவுத் தொழிலாளர் போன்ற திட்டத் தொழிலாளரது ஊதிய உயர்வும், அவர்களை ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நிதிநிலை அறிக்கையில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் காப்பீட்டுத் துறையில் 100% நேரடி வெளிநாட்டு முதலீட்டை (FDI) அனுமதித்துள்ளது, அதே நேரத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு 15,684 கோடியில் இருந்து 1,242 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளையும் பொதுமக்களையும் பெருந்தொழில் காப்பீட்டு நிறுவனங்களின் கரங்களில் ஒப்படைப்பதாகும். இது கவலைக்குரிய போக்காகும்.

பீகார் நீண்ட காலமாக சிறப்பு மாநில தகுதியை கோரி வருகிறது. பீகாருக்கு சிறப்புத்

தகுதி வழங்குவோம் என்று மோடியும் பாஜகவும் வாக்குறுதி அளித்திருந்தனர். இந்த நிதிநிலை அறிக்கையில் மீண்டும் அந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது. தாமரை விதைகளுக்கான (மக்கானா) வாரியம் போன்ற திட்டங்கள் மாநில வளர்ச்சிக்கு சற்றுக்கூட போதுமானதில்லை.

கடந்த ஆண்டு, மூலதன செலவினங்கள் அதிகரித்ததற்காக அரசாங்கம் தன்னைத்தானே பாராட்டிக்கொண்டது. ஆனால் இந்த செலவினங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் 1.84 லட்சம் கோடி ரூபாய் என்ற மிகப்பெரிய அளவு குறைவாக உள்ளது.

எந்தத் துறைக்கு முன்னுரிமை தர வேண்டுமோ அதனை விடுத்து முன்னுரிமை தேவையில்லாததுறைகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது என்பதை இது காட்டுகிறது. பட்ஜெட்டில் உள்ள கணக்குகள் காட்டுவது என்னவென்றால், 2025-26 நிதியாண்டில் மொத்த பட்ஜெட் செலவினங்களில் ஏற்படும் மொத்த அதிகரிப்பில் சுமார் 40 சதவீதம் கடந்த காலத்தில் வாங்கிய கடன்களுக்கான கூடுதல் வட்டிச் செலவினங்களுக்குப் போய்விடுகிறது. இதனால் அரசாங்கம் செலவு செய்யக் கூடிய நிதியின் அளவு சுருங்கி வருகிறது. நல்வாழ்வுத் திட்டங்களுக்கான செலவினங்களைக் குறைப்பதன் மூலம் ஏழைகள் மேலும் நெருக்கடிக்கு ஆளாவார்கள். அதே நேரத்தில், நடுத்தர வர்க்கத்தினருக்கான வருமான வரியில் தளர்வு அறிவிக்கப்பட்ட போதிலும், 2025-26 நிதியாண்டில் ஜிஎஸ்டி, வருமான வரியிலிருந்து பெறப்படும் வருவாய் வசூல், பெரு நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் வரி வசூலை விட அதிகமாகயிருக்கும் என்பதை வரி வருவாய் வசூல் குறித்த தரவுகள் காட்டுகின்றன.

இன்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்வைத்த நிதிநிலை அறிக்கை, மோடி அரசாங்கம் தனது நெருங்கிய நண்பர்கள் மற்றும் பெரு நிறுவனத் துறைக்கு ஆதரவாக பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்து வருவதை பட்டவர்த்தனமாக காட்டுகிறது. தொழிலாளரது உண்மையான ஊதியங்கள் தொடர்ந்து குறைந்து வருவதும், பெரும்பான்மையானவர்களது வேலைகளுக்கான வாய்ப்பு குறைந்து வருவதும் இவற்றுடன் சேர்த்துப் பார்க்கப்பட வேண்டிய விலைவாசி உயர்வு பிரச்சினையும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பெருநிறுவனங்களின் வரிக்குப் பின் லாபம் நான்கு மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ள அதே நேரத்தில், முக்கியமாக தனியார் துறை அளிக்கும் உண்மையான ஊதியங்கள் குறைந்துள்ளன. ஆனால், பெருநிறுவனங்கள் மொத்தமாக அளிக்கும் வரி தொகை, இப்போது அறிவிக்கப்பட்டுள்ள தனிநபர் வருமான வரியை விட குறைவாக இருந்தும் கூட, நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் கார்ப்பரேட் வரியை அதிகரிக்க பட்ஜெட் மறுக்கிறது.

தொழிலாளருக்கு கிடைக்கும் வேலைகள் குறைந்து வர, அவர்களது ஊதியமும் குறைந்துவர, அதே நேரம் பெருந்தொழில் நிறுவனங்களின் லாபம் அதிகரிப்பதற்கு வழி வகுத்து, பொருளாதார ஏற்றத்தாழ்வு மேலும் இந்தியாவில் அதிகரிக்கும் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை உறுதி செய்திருக்கிறது.❑

**மத்திய கமிட்டி; சிபிஐ எம்எல் (லிபரேஷன் )**

**தமிழாக்கம்: சி. மதிவாணன்**

## தோழர் ஸ்ரீலதா சுவாமிநாதனை நினைவு கூர்வோம்!




5.2.2025, தோழர் ஸ்ரீதா சுவாமிநாதன் அவர்களின் எட்டாவது நினைவு நாள். தோழர் ஸ்ரீலதா சுவாமிநாதன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசியத் தலைவராகவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) மத்தியக் கமிட்டி உறுப்பினராகவும் பணியாற்றியவர். தோழர் ஸ்ரீலதா சுவாமிநாதன் சென்னையில், ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, புரட்சிகர அரசியலால் ஈர்க்கப்பட்டு, ராஜஸ்தான் பழங்குடியினர் மத்தியில் தங்கிவாழ்ந்து, அவர்கள் உரிமைகளுக்காக, விடுதலைக்காக பணியாற்றியதோடு, ராஜஸ்தானில் சிபிஐஎம்எல் கட்சியை வளர்த்தெடுப்பதிலும், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தை (AIP-WA) நாடு தழுவிய அளவில் வளர்த்தெடுப்பதிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் ஆவார். சமூக சமத்துவம், பாலின நீதிக்கான போரில், உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகவும் எல்லாவற்றிற்கும் மேலாக மதவெறி பாசிசத்தின் பிடியிலிருந்து இந்திய ஜனநாயகத்தை விடுவிப்பதற்காகவும் அவரது போராட்ட மரபு நம்மை தொடர்ந்து உத்வேகப்படுத்துகிறது.❑

# இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் தோன்றிய சென்னையில் கூட தொழிற்சங்கம் அமைக்க போராட வேண்டியுள்ளது.



இந்தியாவின் முதல் தொழிற்சங்கம், மெட்ராஸ் லேபர் யூனியன் (1918) இன்று இல்லை. சென்னையின் தொழில் வளர்ச்சி அடையாளமான பின்னி ஆலை (1876) இன்று இல்லை. அந்த ஆலை இருந்த சுவடு கூட இல்லை. ஆனால் தோழர் எஸ் என் நம்மோடு இருக்கிறார். எஸ் என் இருக்கிறார் என்றால் தொழிலாளர் போராட்டம், தொழிற்சங்க வரலாறு என்பது நமக்குத் தெரியும்.இன்று தொழிற்சங்கத்தை ஒழித்துக் கட்ட, தொழிலாளர் உரிமைகளை ஒழித்துக் கட்ட மோடி ஆட்சி சதி செய்து வருகிறது. நான்கு சட்டத் தொகுப்பு கத்தி தொழிலாளர் மீது தொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் தோன்றிய சென்னையில் கூட சாம்சங் தொழிலாளர், சங்கம் வைக்க போராட வேண்டியிருக்கிறது. இன்று தோழர் எஸ் என் போன்ற, டபள்யூ ஆர் போன்ற தொழிலாளர் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். இந்தத் தொழிலாளர் போராட்ட வரலாறு காரணமாகத்தான் ஏஅய்சிசிடியு முதல் அகில இந்திய மாநாடு சென்னையில் நடந்தது. அந்த மாநாட்டின் வெற்றிக்கு எஸ் என் பாடுபட்டார். இன்று ஏஅய்சிசிடியு வின் 11 வது அகில இந்திய மாநாடு தில்லியில் நடக்கும் போது தோழர் எஸ் என் அய் நாம் நினைவு கூறுகிறோம். ஏன் பாஜக மோடி ஆட்சி, நூறாண்டுகால தொழிலாளர் போராட்ட வரலாற்றை, உரிமைகளை துடைத்தெறிய விரும்புகிறது? பாசிசத்துக்கு, தொழிலாளர் வர்க்கம், அதன் போராட்டங்கள் முதல் எதிரி. அதனால்தான் அதை ஒழித்துக் கட்ட மோடி கூட்டம் நினைக்கிறது.மோடியும் அவரது கார்ப்பரேட் நண்பர்களும் தொழிலாளர் போராட்டங்களை வெறுக்கிறார்கள். எட்டுமணி நேர வேலைக்காக போராடி வரலாறு படைத்தவர்கள் பின்னி தொழிலாளர். இன்று வாரத்துக்கு 70 மணி நேர வேலை, 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று நாராயண மூர்த்திகளும் சுப்ரமணியன்களும் துணிச்சலுடன் பேசி வருகின்றனர். அதனால்தான், பின்னி ஆலை தொழிலாளர் போராட்டங்கள் மீண்டும் தேவைப்படுகின்றன. எஸ் என் போன்ற தொழிலாளர் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். கல்லூரி மாணவர்களாக இருந்த நாங்கள், பின்னி போராட்டங்களை ஆச்சர்யத்துடன் பார்த்தோம். அவர்களிடமிருந்து, தோழர் எஸ் என் இடமிருந்து நிறைய கற்றுக் கொண்டோம்.

தோழர் பிரான்சிஸ், தோழர் டி எஸ் எஸ் மணி, எஸ் என் வாழ்க்கை பயண நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டனர். ஆறு நேராக ஓடுவதில்லை. வளைந்து நெளிந்து ஓடும். அருவியாக, ஓடையாக, குளம் குட்டையாக மாறும். அதற்கேற்ப அதன் பயன்பாடும் இருக்கும். தோழர் எஸ் என்னுக்கு சிவப்பு வணக்கம்! எஸ் என் என்று நாம் கொண்டாடும் ஆளுமைக்கு நங்கூரமாய் நின்ற தோழர் பானுவுக்கும் அவரது மூன்று பெண் குழந்தைகளுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்) ன் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.❑

**(ஜனவரி 31 அன்று சென்னை, கோடம்பாக்கத்தில் நடைபெற்ற தோழர் எஸ் நடராசன் நினைவேந்தல் கூட்டத்தில் இகக(மாலெ) மத்தியக் குழு உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் பேசியதின் சுருக்கம்).**

# திருமணத்துக்குள் வல்லுறவை அங்கீகரிக்கத் தவறிய சத்தீஸ்கர் உயர் நீதிமன்றத்தை AIPWA வன்மையாகக் கண்டிக்கிறது.

*10 பிப்ரவரி 2025 அன்று சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு (கோரக்நாத் சர்மா vs சத்தீஸ்கர் மாநிலம்) குறித்து AIPWA அதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இந்த வழக்கில், கணவர் என்பவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377 (இயற்கைக்கு மாறான குற்றம்), 376 (வல்லுறவுக்கான தண்டனை) மற்றும் 304 (கொலைக்கு சமமல்லாத குற்றம்சாட்டத்தக்க கொலையின் தண்டனை) கீழ் குற்றவாளியாக்கப்பட்டதற்கு எதிரான முறையீட்டை மையமாக விசாரித்த நீதிமன்றம், திருமணத்துக்குள் நிகழும் வல்லுறவை அங்கீகரிக்கவோ அதற்குத் தீர்வுகாணவோ தவறியுள்ளது.*

*வழக்கின் பின்னணி:*

*2017ல், ஒரு கணவர் தனது மனைவியின் விருப்பத்திற்கு மாறாக அவரது மலவாயில் கைவிரலை செருகி இயற்கைக்கு மாறான பாலுறவை புரிந்தார். இதன் விளைவாக, அபாயகரமான உடல்நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண், தனது அறிக்கையை பதிவு செய்த பின்னர் அதே நாளில் மருத்துவமனையில் உயிரிழந்தார். காவல்துறை வழக்கைப் பதிவு செய்தது.*

*நீதிமன்றத்தின் முடிவுகள்:*

*- பிரிவு 377 (இயற்கைக்கு மாறான பாலுறவு) கீழ் கணவர்-மனைவி இடையே "சம்மதம்" தேவையில்லை என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.*

*- "பிரிவு 375ல் (வல்லுறவு) குற்றவாளி 'ஆண்' என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், கணவர் 'ஆண்' ஆவதால், மனைவியுடனான பாலுறவு வல்லுறவாகாது" என்று நீதிபதி கூறியுள்ளார்.*

*- பாதிக்கப்பட்டவரின் "இறுதி அறிக்கை" (Dying Declaration) தொழில்நுட்ப காரணங்களால் நம்பத்தகுந்ததாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டது.*

*- "மனைவியின் வயது 15க்கு மேல் இருந்தால், அவரது சம்மதமின்றி கணவர் புரியும் எந்தவொரு பாலுறவும் வல்லுறவாகாது" என்று தீர்ப்பு கூறுகிறது. இது, உச்ச நீதிமன்றத்தின் இன்டிபென்டென்ட் தாட் வழக்கு (2017) தீர்ப்பை முழுமையாகப் புறக்கணிக்கிறது. அந்தத் தீர்ப்பில், "15 வயது" என்பதை "18 வயது" என்று வாசிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.*

*திருமணம் என்பது பெண்ணின் உடல்மீதான கணவனின் "உரிமை"க்கு உத்தரவாதம் அளிப்பதாக நீதிமன்றம் கருதியது. இது இந்திய அரசியலமைப்பின் 14 (சமத்துவம்), 15 (பாகுபாடு தடை), 19(1)(அ) (சுதந்திரம்), 21 (ஆயுள் மற்றும் கண்ணியம்) ஆகியவற்றை மோசமாக மீறுகிறது. திருமணத்துக்குள் வல்லுறவு விதிவிலக்கை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது, 19ஆம் நூற்றாண்டின் "மனைவி கணவனின் சொத்து" என்ற பாரம்பரியக் கருத்தை மீண்டும் உருவாக்குகிறது.*

*ஏனைய உயர் நீதிமன்றங்களின் முற்போக்கான தீர்ப்புகள்:*

*- கர்நாடக உயர் நீதிமன்றம் (2022): "கணவனாலான வல்லுறவும் வல்லுறவே!" என்று தீர்ப்பளித்து, சட்டத்தில் இருந்து விதிவிலக்கை நீக்குமாறு அரசைக் கோரியது.*

*டெல்லி உயர் நீதிமன்றம் (2022) ஒரு நீதிபதி விதிவிலக்கை அரசியலமைப்பு சட்டவிரோதம் என்று கூறிய நிலையில், மற்றொரு நீதிபதி ஆதரித்ததால் "பிளவு தீர்ப்பு" வெளியிடப்பட்டது.*

*குஜராத் உயர் நீதிமன்றம் (2023) கணவனாலான பாலியல் வன்முறைக்கு எதிரான மௌனப் பண்பாட்டை முறியடிக்க வேண்டும்" என்று கருத்து தெரிவித்தது.*

**AIPWAவின் கோரிக்கைகள்:**

*1. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 375ல் இருந்து "திருமண வல்லுறவு விதிவிலக்கை" உடனடியாக நீக்க வேண்டும்.*

*2. உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை முன்னுரிமையாக விசாரித்து, பெண்களின் அரசியலமைப்பு உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.*

*3. பெண்களின் உடல், மனித உரிமைகள் மீதான தாக்கங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*பாலின சமத்துவமின்மைக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்துங்கள்!*

*திருமணத்துக்குள் வல்லுறவை குற்றமாக்கும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுங்கள்!*

15 பிப்ரவரி 2025

**- மீனா திவாரி; தேசிய பொதுச் செயலாளர்**

**- ரதி ராவ்; தேசியத் தலைவர்**

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.02.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# கட்சிக் கல்வி வகுப்பு




# ஒன்றிய அரசின் பட்ஜெட்டிற்கு எதிராக,,,







Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by Chennai Offset Printers, 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, Chennai - 600002. Editor G.Ramesh